

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## மாசி - பங்குனி

மலர் 12 மார்ச் 2023 இதழ் 3

### பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 5 |
| வண்டு ஸ்தோத்ரம் | 7 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 10 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 14 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| பக்த மீராவின் கிருஷ்ண கீதங்கள் | 17 |
| ராஜ தரங்கிணி | 18 |
| அத்வைத ஆசார்ய பரம்பரை | 22 |
| பங்குனி மாத விசேஷ தினங்கள் | 25 |
| சாணக்ய ஸுபாஷிதம் | 26 |
| ஸ்ரீ பால போத ஸங்க்ரஹம் | 28 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 32 |
| அத்வைதமே பரமரகசியம் | 35 |
| வேதாந்த ஸம்வத்ஸரம் | 39 |
| புராணக் கதை | 41 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி | 43 |
| மகாபாரத சுருக்கம் | 45 |
| சிவமானஸிக பூஜை | 47 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்








## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா



வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


**சந்தா விவரம்**

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of
Sri Kanchi Kamakoti Peetam,
No1, Salai Street, Kancheepuram - 631502.
Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை

# प्रार्थना

''ருத்ரனின் புதல்வர்களே மருத்துக்களே ! உங்கள் கரங்களில் ஒளிரும் ஈட்டிகள், மார்பிலே ஒளிரும் தங்கக் கவசங்கள், உங்கள் பலமோ பெரிதினும் பெரிது, மனோ வேகத்தையும் தாண்டும் உங்களது தேர்களின் வேகம். நீங்கள் எங்கள் நலத்திற்கு வருக. எங்கள் நலத்திற்கு வருக.

''மருத்துக்களே உங்கள் பலத்தை நீங்கள் விரும்பி ஏற்கிறீர்கள். பலத்தை ஏந்துகிறீர்கள், பலத்தில் இயங்குகிறீர்கள். உங்கள் ஒளி சுப்ரகாசம். வானமெங்கும் உங்கள் ஜோதி. விரைவாய் ச் செல்லும் உங்கள் தேர்கள் எங்கள் நலத்திற்கு வருக.''

''மருத்துக்களே! நீங்கள் ஏக காலத்தில் பிறந்தவர்கள். மகான்கள். உங்களுடைய புகழ் பாட வார்த்தையில்லை. சூர்யகிரணம் போல் ஒளிரும் உங்கள் மேனி. விரைவாய்ச் செல்லும் உங்கள் தேர்கள் எங்கள் நலத்திற்கு வருக.

ரிக் வேதம் 5ஆம் மண்டலம் 55ஆம் பாடல்

காணி நிலம் வேண்டும் பராசக்தி
காணி நிலம் வேண்டும் அங்கு
தூணிலழகியதாய் நன் மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் அந்தக்
காணி நிலத்திடையே ஓர் மாளிகைக்
கட்டித்தர வேண்டும் அங்கு
கேணியருகிலே தென்னமரக்
கீற்று இள நீரும்

பத்துப்பன்னிரண்டு தென்னை மரம் பக்கத்திலே வேணும், நல்ல முத்துச்சுடர்போல நிலாவொளி முன்பு வர வேணும், அங்கு கத்துங்குயிலோசை சற்றே வந்து காதிற்பட வேணும், என்றன் சித்தம் மகிழ்ந்திடவே நன்றாயிளந்தென்றல் வர வேணும்.

*பாட்டு கலந்திடவே அங்கேயொரு*
*பத்தினி பெண் வேணும். எங்கள்*
*கூட்டக் களியிலே கவிதைகள்*
*கொண்டுதரவேணும், அந்தக்*
*காட்டு வெளியினிலே அம்மா! நின்றன்*
*காவலுறவேணும்; என்றன்*
*பாட்டுத்திறத்தாலே இவ்வையகத்தைப்*
*பாலித்திட வேணும்.*

*ஸ்ரீ பாரதியார்*

**வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்**

**VEDA RAKSHANA NIDHI TRUST**

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/C. No. 602 601205 431
**IFSC Code :** ICIC 0006026
**Bank of Baroda** A/C No. 05320100002089 IFSC CODE barb0chenbs
**Indian Bank,** West Mambalam A/C. No. 418622532 IFSC IDIB 000w005
**Canara Bank,** West Mambalam A/C No. 0917101041732 IFSC CNRB 0002616
**Indian Bank** Mutt Branch, Kancheepuram
A/C No. 411552514 IFSC IDIB b0005085

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN NO ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக்க் கொள்கிறோம்.

Vrnt e.mail : office@vrnt.org <mailto:office@vrnt.org> Phone : 24740549

# ஆசிரியர் பக்கம்

அராஜகம் என்று கூறப்படும் அரசனில்லாத நாட்டில் என்னென்ன நிகழும் என்று பெரிய பட்டியலைத தருகிறது ராமாயணம். இது பற்றி மகாபாரதமும் பேசும். சுருங்கக்கூறின் எந்தக் கட்டுப்பாடுமில்லாமல் மக்கள் இருப்பர். ஆகவே அவர்கள் நலனுக்கு அரசன் தேவை. அவன் கொடுங்கோலனா, நற்கோலனா என்பது அவன் குடிகளுக்குச் செய்யும் சேவையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும். குடிகளுக்கு அடிப்படை வசதி அளித்தல் இயற்கை சீற்றங்களிலிருந்து அவர்களைக் காத்தல், பொருளாதார வசதி அளித்தல், நியாயப்படி நீதி வழங்குதல் போன்ற செயல்கள் ஒரு அரசனின் நல்லாட்சிக்கு உரைகல் ஆகும்.

தற்போது உலகெங்கும் டெமாக்ரஸி, சோஷலிஸ்ட், ஆடோக்ரஸி, ரிப்பப்ளிக் என்று பல சித்தாந்தங்களின் அடிப்படையில் ஆட்சிகள் நடைபெறுகின்றன. இவைகளில் எந்த சித்தாந்தத்தின் ஆட்சி நல்லாட்சியைக் கொடுக்கிறது என்பது கேள்விக்குறியது. Welfare States என்று கூறப்படும் பல நாடுகளில் கூட மக்களின் அத்ருப்தி அதிகமாக உள்ளது. இன்று ஒரு நாடு தனித்து இயங்க முடியாது. பல நாடுகளுடன் உறவு வைத்துக் கொண்டுதான் இயங்க முடியும். அவைகள் தரும் நிர்பந்தத்திற்கு உட்பட வேண்டும். இதில் நல்லாட்சி வருமா! அல்லது ஒரு ‘‘உடோபியா’’ கனவாக இருக்குமா? என்பதும் கேள்விக்குறியே .

அரசன் மக்கள் அவர்களது தொடர்பு பற்றி வால்மீகி ராமாயணத்தில் பல இடங்களில் கூறியுள்ளார். பால காண்டம், அயோத்யா காண்டம் இவ்விரு காண்டங்களிலும் அரசாட்சி பற்றி அவர் சிறப்பாகக் கூறுகிறார். ஒரு லக்ஷிய ராஜ்யத்தையே தசரதரும் ஆண்டார். கிஷ்கிந்தையும் சரி, லங்கையும் இதில் விலக்கல்ல. இதில் வால்மீகி த்ருப்தி அடையவில்லை போலும். ராமர் எப்படி அரசாண்டார் என்று யுத்த காண்டத்தின் இறுதியில் பட்டாபிஷேகத்திற்குப்பின் விவரிக்கிறார். சற்று அதைப் பார்ப்போம்.

‘‘ராமர் அரசாளுகையில் ஸ்த்ரீகள் விதவையாகவில்லை. துஷ்ட ம்ருகங்களால் உபத்ரவமில்லை. வ்யாதியால் யாரும் பீடிக்கப்படவில்லை, திருடர் பயமில்லை, அகாலத்தில் யாரும் இறக்கவில்லை. தர்மஸ்வரூபியான ராமனை அனுஸரித்து மக்கள் அனைவரும் தர்ம வழியிலேயே நின்றனர். ராமர் அரசாளுகையில் அயோத்யை

முழுவதும் ராமன் ராமனென்றே அனைவரும் ராமசரிதத்தைக் கூறி அவரைக் கொண்டாடினர். ஜகத் முழுவதும் ராம மயமாயிற்று. எந்த ருதுவிலும், மரங்கள் செழிப்புடன் பலனளித்தன. மேகங்கள் மாரியை தகுந்த காலத்தில் வாரி வழங்கின. அனைத்து மக்களும் பேராசையின்றி மகிழ்ச்சியுடன் இருந்தனர்.

மக்கள் ஸத்யவான்களாயும், தர்மவான்களாயும் இருந்தனர். எந்த துன்பமுமில்லை. இது வால்மீகி பகவான் காட்டிய ராம ராஜ்யம். இது வெறும் உடோபியாவா அல்லது அவரது கற்பனையா என்று ஐயப்படலாம். அந்த ஐயம் தேவையற்றது. எனெனில் அவர் பொய் கூறுபவரல்லர். அதற்கு முகாந்த்ரமும் இல்லை. அவரே ப்ரத்யக்ஷமாகப் பார்த்ததை ராமாயண காவ்யமாக வடித்தவர். அது ஒரு லக்ஷிய நாடு. அதை எப்படி நடைமுறைக்குக் கொண்டு வருவது என்று சிலர் வினவலாம். அரசனுக்கு ஒரு லக்ஷியம் இருப்பதுதான் நல்ல லக்ஷணம். அது ராம ராஜ்யமாக இருக்க வேண்டும். அதைக் குறிக்கோளாகக் கொண்டு எந்த அரசனும் இயங்க வேண்டும். மக்களையும் நல் வழிப்பாதையில் அழைத்துக் கொண்டு போவது அவனது கடமை. அரசன் எவ்வழி மக்கள் அவ்வழி என்று கூறுவது போல் அரசன் முன் மாதிரியாக இருந்தால் போதும் மக்களும் அவனை பின்பற்றுவர். இதில் ஐயமில்லை. காந்தி கண்ட கனவும் ராம ராஜ்யம் தான் எனினும் வால்மீகி காட்டியதில் வேறுபாடு உள்ளது. அம்மாதிரியான அரசன் நமக்குத் தேவை. ஜகத் ராம மயமாகியது போல் நம் நாடும் ராம மயமாக அந்த ராமனையே ப்ரார்த்திப்போம் என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்களின் பொற் பாதத்தில் சமர்ப்பிக்கிறோம்.

ஜய ஜய சங்கர! ஹர ஹர சங்கர !

**அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்**
**பிறஆழி நீந்தல் அரிது ॥ ८ ॥**

*புண்ணியக் கடலாம் மறைகள் மையக் கருத்தாகிய கடவுளின் திருவடிகளைச் சார்ந்திருப்பவர்களைத் தவிர (மற்றவர்கள்) பொருள், இன்பமாகிய பிறகடல்களைக் கடப்பது மிகக் கடினமாது (இயலாது).*

*மறைமொழிகள் அருளும் இந்த அறவழியை ஏற்காத மனிதர்கள் என்னை அடையாமல் இன்ப துன்பங்களில் உழல்கிறார்கள்.*

*(ஸ்ரீமத் பகவத்கீதை9-3)*

## Á s k ì÷uõzµ®

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

# குறையொன்றுமில்லாத கோவிந்தா



ராமாயணத்தில் ஸ்ரீ ராம பட்டாபிஷேகம் மாதிரி, பாகவதத்தில் பகவானுக்குப் பட்டாபிஷேகமான ஸந்தர்ப்பத்தில் சூட்டப்பட்ட பெயர் 'கோவிந்த' என்பதே. ராமர் மாதிரி கிருஷ்ணர் பெரிய ராஜ்யத்துக்கு ராஜாவாகப் பட்டாபிஷேகம் பண்ணிக் கொள்ளா விட்டாலும் தேவ ராஜாவாகவே பட்டாபிஷேகம் பெற்றதால் இதற்கு ரொம்ப முக்யத்வமுண்டு. 'கோவிந்த ராஜா' என்று கிருஷ்ணனுடைய பல பெயர்களில் இதற்கு மட்டுந்தான் 'ராஜா' சேர்க்கிறோம்.

எனக்கு ஒன்று தோன்றுவதுண்டு. ஆண்டாள் திருப்பாவையில் 'குறையொன்றுமில்லாத கோவிந்தா' என்று கூப்பிடுகிறாள் அல்லவா? பகவானுக்குக் குறை இருந்தது என்று யாராவது நினைப்பதுண்டா? ஸாதாரண மநுஷ்யன். குறைப்பட்டுக் கொண்டேயிருக்கும் ஸ்வாபவமுள்ளவன். அதனால் அப்படியில்லாத ஒருவனைக் 'குறையொன்றுமில்லாத மநுஷ்யா?' என்று விசேஷிப்பது பொருத்தம். பகவானை ஏன் இப்படிச் சொல்ல வேண்டும்? இப்படிச் சொல்வதாலேயே, 'அப்பா குதிருக்குள் இல்லை' என்கிற மாதிரி, பகவானுக்குக் குறையிருந்தது போலத்தானே த்வனிக்கிறது?

யோசித்துப் பார்த்ததில், பகவானுக்கு வாஸ்தவமாகவே பூர்வத்தில் ஒரு குறை இருந்து, அது கோவிந்தனாக அவன் ஆனபோதுதான் தீர்ந்தது என்று தெரிந்தது.

பகவானுக்கு என்ன குறை இருந்தது ? ராமர் பட்டாபிஷேகம் என்றேனே அதிலேதான் குறை ! சக்கரவர்த்தியாக முடி சூடியதில் என்ன குறை என்றால், இதை வால்மீகி தம்முடைய ராமாயணத்தில் வர்ணித்திருக்கிற தினுஸிலே தான் குறை ஏற்பட்டு விட்டது.

'வஸிஷ்ட வாம தேவாதி ரிஷிகள் எட்டு பேர் ஸ்ரீ ராம சந்தரமூர்த்திக்குப் பட்டாபிஷேகம் பண்ணினார்கள். அது எப்படி தெரியுமா இருந்தது? அஷ்ட வஸுக்கள் தேவேந்த்திரனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணின மாதிரி இருந்தது என்று வால்மீகி

வர்ணித்திருக்கிறார். **'வஸவோ வாஸவம் யதா - வாஸவன்'** எனப்படும் இந்த்ரனுக்கு வஸுக்கள் பண்ணியது போல என்று அர்த்தம்.

இந்த Comparison (ஒப்புவமை) தான் ராமருக்குக் குறை உண்டாக்கிவிட்டது. ஏன்? இந்த்ரன் சீரழிந்த கதையை இதே வால்மீகி பாலகாண்டத்தில் சொன்னார். கௌதம பத்னியாகவே - அதாவது தாய் போல் மதிக்க வேண்டிய - ரிஷிபத்தினி அஹல்யையிடம் தப்பாக நடந்து கொண்டு, மஹாபாவம் பண்ணினவன் இந்த்ரன், அதற்காக சாபத்தை வாங்கிக் கட்டிக் கொண்டு அவமானப்பட்டவன். பதிதையாகிவிட்ட அஹல்யைக்கு ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தி புனருத்தாரணம் தந்த பெருமைதான் இன்றைக்கும் அவரை **'பதித பாவன ஸீதாராம'** என்கிறோம்.

கதை இப்படியிருக்க, அந்த இந்த்ரனையே தனக்கு உவமையாக வால்மீகி மஹர்ஷி சொல்லி விட்டதில் ராமருக்கு உள்ளூரக் குறை ஏற்பட்டு விட்டது. ஏகபத்னீ வ்ரதனான தம்மை, தகாத பாபம் பண்ணினவரோடு ஒப்பிட்டுவிட்டாரே என்று ஒரு குறை.

ஆதியிலே ஒரு பட்டாபிஷேகம் நிச்சயமான ஸமயத்திலே அது நிறைவேறாமலே ராமர் வனவாஸம் பண்ணும்படி ஆயிற்று. அப்புறம் பதிநாலு வருஷங்கள் ஜனங்கள் தவியாய்த் தவித்துக் காத்திருந்து மறுபடி பட்டாபிஷேகம் நடக்கிறது. அதனால் பட்டாபிராமன் என்றே பகவானுக்கு ஒரு பேர் ஏற்பட்டிருக்கிறது. ராமாயண பாராயணம், ப்ரவசனம் எதுவானாலும் பூர்த்தி செய்யும் மங்களமான கட்டம் அதுதான். அங்கே போய், பால காண்டத்தில் தன் கால் தூசியினாலேயே பரிசுத்தி பெற்று ஒருத்தியை ஆதியில் தூசுபடுத்தியவனோடு தன்னை ஒப்பிட்டால் பகவானாகத்தானிருக்கட்டும், அவர் மநுஷ்யம் மாதிரி தானே நன்றாக 'ஆக்ட்' பண்ணினார், அதனால், வருத்தம் ஏற்படத் தானே செய்யும்?

இன்னொரு குறை : இந்த்ராதி தேவர்கள் ராவணனின் ஹிம்சையைத் தாங்க மாட்டாமல் ப்ரார்த்தனை பண்ணிக் கொண்டதன் மேல் தான் மஹாவிஷ்ணு ராம அவதாரம் பண்ணினது. ராவணனின் புத்ரன் மேகநாதனே இந்த்ரனை ஜயித்து 'இந்த்ரஜித்' என்று பெயர் பெற்றிருந்தான். அப்படிப்பட்ட ராவணனைத் தாமே ஜயித்தும், இந்த்ரஜித்தைத் தாம் ஜயிக்க வேண்டுமென்று இல்லாமல் தம்பி லக்ஷ்மணனை விட்டே ஜயித்தும் விஜயராகவனானவர் ராமர். இப்படி ஸமூலம் ராக்ஷஸ ஸம்ஹாரம் பண்ணிவிட்டுப் பட்டாபிஷேகம் பண்ணிக் கொள்கிற போது, தம்மிடம் தோற்றுப் போனவனிடம் தோற்றுப் போன இந்த்ரனுக்கே தம்மை 'கம்பேர்' பண்ணினால் குறையாகத் தானே இருக்கும்? வால்மீகி பாத்திரங்களின் குணத்தை Compare பண்ணி இப்படிச் சொல்லவில்லை. பட்டாபிஷேக வைபவத்திலிருந்த ஆனந்த கோலாகலத்தைப்

பார்த்ததும் தேவலோகத்தில் நடந்த இந்த்ர பட்டாபிஷேகத்தின் விமர்சைக்கு இதை ஒப்பிடலாம் என்று நினைத்தார். எட்டு வஸுக்கள் மாதிரியே இங்கேயும் ஸரியாக எட்டு ரிஷிகள் அபிஷேகம் பண்ணினவுடன், **'வஸவோ வாஸவம் யதா'** என்று உத்ஸாஹத்தில் எழுதி விட்டார்.

இதனால் பகவானுக்கு உள்ளுக்குள்ளே ஏற்பட்ட குறை, அப்புறம் க்ருஷ்ணவதாரத்தில் ஸாக்ஷாத் அந்த இந்த்ரனே, தோற்றேன் என்று இவர் காலில் வந்து விழுந்து இவருக்கு 'கோவிந்த' பட்டம் தந்து அபிஷேகம் பண்ணின போதுதான் தீர்ந்தது. ராம பட்டாபிஷேகத்தில் உண்டான குறை கோவிந்த பட்டாபிஷேகத்தினால்தான் தீர்ந்தது. இதைத் தான் ஆண்டாள் Suggestive ஆக (குறிப்பால் உணர்த்து முகமாக) குறைவொன்றுமில்லாத கோவிந்தா என்று சொன்னாள்.

'குறைவேயில்லாத என்றால் பரிபூர்ண வஸ்து என்று அர்த்தம்' 'பூர்ணம் ப்ரஹ்ம ஸநாதனம்', 'பூர்ணாவதாரம் என்று க்ருஷ்ண பரமாத்மாவைச் சொல்வது இதனால் தான்'

(தொடரும்)

ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

## ஸ்வர்ண ரத சேவா



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

♦ அனுஷம் ♦ மூலம் ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**
ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

# கல்வியும் கட்டுப்பாடும்

**'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது'**

ஆடு, மாடுகள் போல நாமும் சாப்பிட்டு தூங்குவதோடு மட்டுமல்லாது, படிப்பு என்ற சிறப்பு அம்சத்தையும் பெற்றிருக்கிறோம்.

படிப்பதன் மூலம் உயர வாய்ப்பு உள்ளது.

ஆடு, மாடுகள் சாப்பிடக் கூடாத பொருள் இருந்தால், அதை நுகர்ந்து பார்த்துவிட்டுப் போய்விடும். வண்டி, வாகனங்கள் வந்தால், தானாகவே ஒதுங்கிப் போய்விடும். அந்த அளவிற்கு அதற்கு விவேகம் உண்டு.

அதாவது கெடுதலிலிருந்து தப்பிப்பதற்கும், மீண்டு வருவதற்கும் அவற்றிற்கு விவேகம் உண்டு. ஆனால் நல்லது செய்வதற்கு உரிய விவேகம் ஆடு மாடுகளுக்கு கிடையாது.

கெடுதலை நீக்குவதற்கு மட்டுமான பகுத்தறிவு மட்டுமே மிருகங்களுக்கு உள்ளது.

ஆனால் கெடுதலை நீக்கிவிட்டு, நல்லதை அடையும், பகுத்தறிவு மனிதனுக்கு இருக்கிறது.



அப்படிப்பட்டப் பகுத்தறிவுடன் நல்ல நிலையில் வாழ்வதற்குப் படிக்க வேண்டும்.

மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது தான் கல்வி. வெறும் ஏட்டுப் படிப்போடு நின்று விடாமல், படித்ததைக் கடைப்பிடித்து அதன்படி வாழ்க்கையிலும் முன்னேற வேண்டும்.

எவ்வளவு படித்திருந்தாலும், நல்ல குணம் இல்லாவிட்டால் அவனை எவருமே சீண்ட மாட்டார்கள்.

ஒருவன் ஒழுங்கானவனாக வளர்வதற்கு நல்ல கல்வி இன்றியமையாதது. அதனால் தான் தனியார் பள்ளிகளில் பேச்சு, பாட்டு, நடனம் என்று எல்லாக் கலைகளையும் கற்றுத் தருகிறார்கள்.

கலைப் பயிற்சிகள் மூலம் உள்ளத்திலே உள்ள ஆற்றலை வெளியே கொண்டு வருகிறார்கள். அதன் மூலம் உலகில் நல்ல புகழையும் எடுப்பார்கள். பேரும் புகழும் உள்ள நல்ல மனிதனாக வாழ அஸ்திவாரம் தான் கல்விச் சாலை.

இந்தக் கல்விச் சாலையில் எந்த அளவிற்கு நீங்கள் ஈடுபாடு கொண்டு அறிவை வளர்த்துக் கொள்கிறீர்களோ, அந்த அளவுக்கு வரும் காலத்தில் உயர்ந்த மனிதர்களாக வளர்வீர்கள்.

அஸ்திவாரம் நன்றாக இருந்தால் தான் கட்டடம் நன்றாக இருக்கும் என்பார்கள்.

வாழ்க்கைக்கு அஸ்திவாரமாக நல்ல கல்வியும், கலாசாரமும், பண்பாடும் அமைய வேண்டும். அப்படி அமைந்து விட்டால் அது வாழ்க்கையில் வரக்கூடிய எல்லா பிரச்சனைகளையும் அவற்றைத் தாங்கும் சக்திகளையும் நமக்கு வழங்கும்.

இத்தகைய கல்வியால் பிரச்சினைகள் வராமல் தடுக்கவும் முடியும். வந்ததைப் போக்கிக் கொள்ளவும் முடியும். அந்த அளவுக்குக் கல்வி நமக்கு கலை பண்பாட்டோடு இருக்க வேண்டும்.

அதுவும் குறையற்ற, தரமான கல்வியாக அமைய வேண்டும். ‘அப்படிப் படிப்பதா? இப்படிப் படிப்பதா’ என்ற குழப்பமே இல்லாமல் அது தெளிவான படிப்பாக இருக்க வேண்டும்.

கல்வி லட்சியத்தோடு வாழ்க்கை நடத்த வேண்டும். லட்சியம், குறிக்கோள் இல்லாமல் வாழ்க்கையை நடத்தக் கூடாது.

பஞ்சபாண்டவர்கள், துரியோதனர்கள், 105 பேர் இருந்தார்கள். அவர்களுக்கு வில் வித்தை கற்றுக் கொடுத்தார். துரோணாச்சாரியார். அவர் வித்தை கற்றுக் கொடுத்த பிறகு அவர்களுக்கு ஒரு போட்டி வைக்கிறார்.

நதிக்கரையில் வைத்து அந்தப் போட்டியை ஆரம்பித்தார். மரத்தின் மீது கர்ணன் முதல் துரியோதனன் வரை ஒவ்வொருவரையும் அம்புவிடச் செய்தார்.

மரத்தின் மீது விடச் சொல்கிறாரே.. எதைக் குறி வைத்து அடிப்பது என்று அவர்கள் குழம்பினார்கள்.

அர்ஜுனனின் முறை வந்தது. அவன் மரக்கிளை மீது பச்சைக் கிளி உட்கார்ந்திருக்கிறதை பார்க்கிறான். அதன் மூலம் ஆசிரியர் எதற்காக மரத்தில் அடிக்கச் சொல்கிறார் என்று தெரிந்து கொண்டான். ஆகவே குறிக்கோளுடன் பதிலடி கொடுத்தவன் அர்ஜுனன்.

அப்படிப் படிப்பிலே, புத்தியிலே, நிகரற்றவனாக அர்ஜுனன் இருந்தான்.

அதுபோல நாமும் குறிக்கோளுடன் என்ன கேள்விக்கு என்ன பதில் எழுதுவது என்று நிதானமாக ஆராய வேண்டும்.

குரு பக்தியிலே நிகரற்றவனாக ஏகலைவனைச் சொல்வார்கள். ஏகலைவன் தனது குருவைப் பார்த்ததே இல்லை. அவருடைய பொம்மையை வைத்தே கும்பிட்டுக் கும்பிட்டு வில் வித்தையெல்லாம் கற்றுக் கொண்டு பெரிய வில் வீரனாக மாறிவிட்டான்.

இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட அர்ஜுனன், துரோணாச்சாரியாரைச் சந்தித்து நமஸ்கரித்து என்னை ஈடு இணையற்ற வில்வித்தை வேந்தனாக, எல்லோரையும் விட, உயர்ந்தவனாக ஆக்குகிறேன் என்றீர்களே... இப்போது என்னைவிட நிகரற்றவனாக ஏகலைவன் விளங்குகிறானே.... என்று கேட்கிறான்.

அப்போது வரை துரோணாச்சாரியாருக்கு ஏகலைவனைப் பற்றித் தெரியாது. அதனால் ஏகலைவனைத் தேடி காட்டுக்குள்ளே அர்ஜுனனையும், அழைத்துக் கொண்டு செல்கிறார். அங்கே ஏகலைவன் பொம்மையை வைத்துக் கொண்டு வணங்கி, வணங்கி பயின்று கொண்டு இருக்கிறான். கலையில் நிகரற்றவனாக இருக்கிறான்.

குருவை நேரில் பார்க்கவிட்டாலும்கூட, நேராக ஆசி பெறாவிட்டாலும் கூட நம்முடைய ஈடுபாடும், பக்தியும், முயற்சியும் குருவே நம் நேரில் இருந்து நமக்கு அருள் பாலித்து பலனைக் கொடுக்கிறார்.

ஏகலைவனின் செயலைப் பார்த்து அதிசயப்பட்டான் அர்ஜுனன். ஏகலைவன் குரு பக்திக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினான்.

வீரத்திற்கும், லட்சியத்திற்கும், குறிக்கோளுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கினான் அர்ஜுனன்.

ஆக பக்திக்கு எடுத்துக்காட்டாக ஏகலைவன் போலும், லட்சியத்திற்கு எடுத்துக்காட்டாக அர்ஜுனன் போலும், நம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் விசேஷமாக அமையும்.

அத்தகைய படிப்புகளை கொடுப்பதற்காகத்தான் இது போன்ற பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முத்து முத்து மூன்று முத்து என்பார்கள்.

மாணவர் - பெற்றோர் - ஆசிரியர் ஆகிய மூன்று முத்துக்களிடையே ஒரு ஒத்துழைப்பு வேண்டும்.

மாணவர்கள் சண்டித்தனம் இல்லாமல் ஒழுங்காகப் படித்தால்தான் பயன் பெறுவார்கள். பெற்றோர் சரியாக இருந்தும்,

ஆசிரியர் சரியாக இருந்தும், மாணவர்கள் ஒத்துழைக்காவிட்டால் ஒரு பிரயோஜனமும் இல்லை.

அன்றன்று படித்து, அவ்வப்போது எழுதி, பக்தியுடனும், ஒழுக்கத்துடனும் இருந்து வந்தால் அந்த மாணவன் விரைவாக உயர்வான்.

மாணவர்களுக்குத் தண்ணீராகவும், உறவாகவும் இருப்பவர்கள் பெற்றோர்களும், ஆசிரியர்களும்.

மாணவர்கள் எப்போதும் படிப்பிலே கவனம் செலுத்த வேண்டும். பண்பிலே கவனம் செலுத்த வேண்டும். நல்ல மாணவன் என்ற பெயர் எடுக்க வேண்டும். மோசமானவன் என்று பெயர் எடுத்தால் யாருக்குமே பயன் இல்லை.

குணத்தோடும், பக்தியோடும் நல்ல மாணவ மாணவிகளாக இருந்து, அதனால் பள்ளிக் கூடத்திற்கும் நல்ல பெயர் கிடைக்க வேண்டும்.

மாணவர்களால் பள்ளியும், பள்ளியால் மாணவர்கள் உயர்ந்து கோல்டன் ஜூப்ளி, டைமண்ட் ஜூப்ளி கொண்டாடி ஆண்டாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று விளங்க ஆசீர்வதிக்கிறோம்.

ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர

இனி கவலை வேண்டாம். 50, 70, வருடங்களுக்கு முன் உள்ள பழைய
(Reprint or Letterpress Books)
**ஸம்ஸ்க்ருத, தமிழ், க்ரந்தம், கந்நடம், தெலுங்கு,** etc.
ஆகிய எல்லா மொழிகளிலுள்ள புத்தகங்களை
புதிய Fontல் அச்சிட்டுதரப்படும்.
(Without Re-typeing, no proof reading)
விவரங்களுக்கு : **V.K.N. Enterprises, Mylapore,**
**Chennai-600004, Cell : 9840217036, vknprinter@gmail.com**
*We reprint old books without retyping ! Books of 50,70 etc. years can be reprinted with new fonts in all languages.*
*Sanskrit, Tamil, Grantham, Telugu, English, Kannada, Malayalam, Hindi etc.*
*Contact above address.*

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

விசாகப் பட்டினம் பாண்டுரங்கன் கோவிலில்
பெரியவா ஆற்றிய அருளுரை (21/02/2023)

துர்லபா துர்க்கமா துர்க்கா துக்கஹந்த்ரீ ஸுகப்பரதா

दुर्लभा, दुर्गमा, दुर्गा, दुःखहन्त्री, सुखप्रदा



துர்லபா - அம்மாவின் கடாக்ஷம் என்பது ஏதோ சுலபமாக வெளியே சென்று பெற்று விடலாம் என்பது கிடையாது. அங்கே சென்றோம், நின்றோம், கிடைத்தது என்பது கிடையாது. துர்லபா என்றால், தபஸ் செய்து, உபவாசம் செய்து, மௌனமாக இருந்தால் அம்மாவின் ஆசிர்வாதம் இருக்கும். ஜபம் செய்தால், அனுஷ்டானம் செய்தால், அம்மாவின் அனுக்ரகம், ஆசிர்வாதம் கிடைக்கும்.

துர்க்கமா- மனிதர்கள் தான் பெரியவர்கள் என்று நினைத்துக் கொண்டு உள்ளார்கள். மனிதர்கள் அனைவரும் தான் மற்றவர்களை விட பெரியவன் என்று நினைத்துக் கொண்டு உள்ளார்கள். துர்க்கம்மாவை அறிந்து கொள்வது கடினம். அம்மாவின் சக்தியை அறிந்து கொள்வது கஷ்டம்.

துர்லபா, துர்க்கமா, துர்க்கா துக்கஹந்த்ரீ மனதில் அநேக துக்கம் உள்ளது. சரீரத்தில் உடம்பில் , மனதில் அநேக துக்கம் உள்ளது. துர்க்கா துக்கஹந்த்ரீ அநேக விதமான துக்கத்தையும் அழிப்பவள் துர்க்கா. துக்கம் போனால் என்ன வருகிறது? துக்கம் போனால் சுகம் வருகிறது.

துர்க்கம்மாவை பூஜை செய்தால் - துர்லபா , துர்க்கமா துர்க்கா துக்கஹந்த்ரீ ஸுகப்ரதா - சுகம் வருகிறது. அப்பேர்பட்ட துர்க்கம்மா பிரசித்திபெற்ற ஆந்திர தேச கனகதுர்க்கா. ஆந்திர தேசத்தில் கனக துர்க்கா, அஷ்ட புஜ கனக துர்க்கா. திருத்தணி அருகில் துர்க்கம்மா உள்ளாள். வங்காளத்தில் சக்தி உபாசனை பிரபலமாக உள்ளது. முக்கியமானது.

காணாபத்தியம், சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், சௌரம் என சங்கராச்சாரியார் ஆறு பூஜா விதானம் வகுத்துள்ளார், கூறினார். சக்தி உபாசனையை முக்கியமாக செய்து, வங்காளம் வந்தார். வங்காளம் என்பது கௌடபாதார் பூமி. சங்கராச்சாரியாரின் குரு கோவிந்த பகவத்பாதார்அவர்களின் குரு.

சர்வ வேதாந்த சித்தாந்த கோசரம் தம கோசரம் கோவிந்தம் பரமானந்தம் ஸத் குரும் ப்ரணதோஸ்ம்யஹம்

सर्ववेदान्तसिद्धान्तगोचरं तमगोचरम् ।
गोविन्दं परमानन्दं सद्गुरुं प्रणतोऽस्म्यहम् ?

சங்கராச்சாரியாரின் குருவின் பெயர் கோவிந்த பகவத்பாதாச்சாரியார். அவரின் குரு கௌடபாதாச்சாரியார் வேதாந்தத்தில் கௌடபாத காரிகை என்ற புத்தகம் உண்டு.வங்காளம் என்றாலே சாஸ்திரம் நன்றாக படித்தவர்கள், அங்கே நவத்தீபம் என்று ஒன்று உள்ளது. ஸ்ரீ வித்யா ஜபம் செய்பவர்கள் மணித்தீபம் என்பார்கள். வங்காளத்தில் நவத்தீபம் என்று ஒன்று Sankaracharya Gate, தர்க்க சாஸ்திரம் கற்றுக் கொண்டவர்கள் இருந்தார்கள். கடாதர பட்டாச்சார்யா என்ற பண்டிதர் இருந்தார். அம்மாதிரி பண்டிதர்கள் இருக்கும் ஸ்தலம். நல்ல பண்டிதர்களின் பூமி. நன்றாக படித்தவர்கள் பூமி. அங்கிருந்து இங்கு வந்து, சட்டோபாத்யாய, கங்கோபாத்யாயா, முகோபாத்யாயா, பந்தோபாத்யாயா- அனைத்து உபாத்யாயம் - உபாத்யாயம் என்றால் teacher என்று அர்த்தம். Teacher என்றால், அவர்கள் நன்றாகப் படித்து தர்மப் பிரசாரம் செய்தவர்கள், செய்தார்கள். சாம வேதம் அங்கு விசேஷம். அதற்காக நமது காஞ்சி ஸ்வாமிகள் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸ்வாமிகள், வங்காளத்தில் சங்கர நாராயண ஸ்ரௌதி என்பவரை அனுப்பி சாம வேதத்தை புதுப்பித்தார். (Revive). மேற்கு வங்காளத்தில் ஜகன் குமார் சாட்டர்ஜி, வாமன் குமார் சாட்டர்ஜி என்பவர்களுக்கு கற்பித்து சாம வேதத்தை மீண்டும் புதுப்பித்தார், ஒளி பெறச் செய்தார் நமது காஞ்சி ஸ்வாமிகள்.

காஞ்சிபுரம் எங்கே உள்ளது? மேற்கு வங்காளம் எங்கே உள்ளது.?அதனால், மேற்கு வங்காளத்தில் சமஸ்க்ரித பிரசாரம், வேத பிரசாரம், தர்மப் பிரச்சாரம் மீண்டும் தொடர வேண்டும். பக்தி பிரசாரம் மீண்டும் தொடர வேண்டும். குருதே கங்கா சாகர் கவனம். கபில முனியின் ஆஸ்ரமம் அங்கே உள்ளது கங்கா சாகரத்தில். பல முக்கியமான புண்ணிய க்ஷேத்திரம் உள்ள பூமி. தக்ஷின காளி கோவில் உள்ளது. அந்தக் கோவிலுக்கு சென்றோம். மிட்னாபூர் அருகில் ஒரு வேத பாடசாலை

உள்ளது. சிலிகுரியில் ஒன்று உள்ளது. வங்காளத்தில் நமது சனாதன கலாச்சாரம் மீண்டும் வர வேண்டும். டாகேஸ்வரி கோவில் டாக்காவில் உள்ளது. அங்கே கூட Sankaracharya Gate என்று ஒன்று வைத்து, நமது ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் டாக்கா சென்றார்கள். நமது பிரணாப் முகர்ஜி அவர்கள் அங்கே சென்று அனைத்தும் செய்ய உதவினார்கள். சண்டி ஹோமம் டாகேஸ்வரி கோவிலில் செய்தார்கள். பக்தி பிரச்சாரம் நாம் செய்ய வேண்டும்.

ஹர ஹர சங்கர, ஜெய ஜெய சங்கர

# ராம நாம மகிமை

ராம சரித மானஸ்

ஸ்ரீ ராமன் பக்தர்களின் நன்மை கருதி மனித உருவில் வந்து தான் கஷ்டங்களை அனுபவித்து ஸாதுக்களை சுகப்படுத்தினார். ஆனால் பக்தர்கள் பேரன்புடன் ராம நாம ஜபம் ஜபித்து எளிதாகவே ஆனந்தமும் மேன்மையும் பெற்று விடுகின்றனர்.

ஸ்ரீ ராமன் ஒரே ஒரு தவசியின் மனைவியை (அகலிகை) கரை ஏற்றினார். ஆனால் ராம நாமம் கோடி கொடியவர்களின் கெடுமதியை தூய்மையாக்குகிறது. ஸ்ரீ ராமன் ஒரு முனிவருக்காக ஒரு ஸுகேதுவின் பெண்ணான தாடகையையும், அவளுடைய படையையும் பிள்ளையையும் (ஸுபாஹு) முடிவு கட்டினார். ஆனால் ராம நாமம் தன்னுடைய பக்தர்களின் மாசுகள், துயரங்கள், பேராசைகள் எல்லாவற்றையும் சூர்யன் இருட்டைப் போல் அழித்து விடுகிறது. ஸ்ரீ ராமன் சிவபெருமானின் ஒரு வில்லைத்தான் ஒடித்தார். ராம நாமப் பெருமை உலகில் எல்லா பாவங்களையும் அழித்து விடுகிறது.

ராமப் ப்ரபு ஒரு தண்டக வனத்தைச் சீர்படுத்தினார். ராம நாமமோ எண்ணற்ற மாந்தர்களின் மரங் காடுகளைத் துயதாக்குகிறது. ரகு நந்தன் அரக்கர் கூட்டங்களை அழித்தார். ராம நாமமோ கலியுகத்தின் அத்தனை பாபங்களையும் வேரோடு களைகிறது.

ஸ்ரீரகு நாதன் சப்ரீ ஜடாயு போன்ற உத்தம அடியார்களுக்கு நற்கதி அளித்தார். ராம நாமமோ எண்ணற்ற கொடியோர்களைக் கரை ஏற்றியது. நாமத்தின் பெருமை வேதங்களில் ப்ரசித்தம்.

# பக்த மீராவின் க்ருஷ்ண கீதங்கள்



**ராகம் செஞ்சோடி**

**மேரே தோ கிரிதர் கோபால் தூஸ்ரே ந கோ இ**
**ஜாகே ஸிர் மோர் முகுடமேரோ பதி ஸோ இ ப்ரபு**
**சங்க சக்ர கதா பத்ம் கண்ட மாலா கோ இ**
**தாத மாத பந்து ப்ராத அப்னா ந கோ இ**
**சாண்ட த இ குல் கோகான் கா கரேகா ஹே கோ இ**
**அஸுவன ஜல் ஸீன்சி ஸீன்சி ப்ரேம் பேல் போஇ**
**தாஸீ மீரா ப்ரபு லகன் லகீ அப் மோஹீம்**
**மேரோ தோ கிரிதர் கோபால் தூஸ்ரே ந கோ இ**

கோபாலனே, கிரிதரனே என்னுடையவன் யாருடையவனும் இல்லை. முகுடத்தில் மயிற் பீலி சங்க சக்ர தாரி, மார்பில் மணம் கமழ் தாமரை மாலை எனக்கு அப்பனில்லை அம்மை இல்லை பந்துவுமில்லை உடன் பிறந்தார் யாருமில்லை. குடும்பப் பந்தத்தைத் தொலைத்தேன். பாஷ்பம் பொங்க என் காதலைத் தெரிவிக்கிறேன். தாஸி மீரா கிரிதரனுடன் காதல் கொண்டுள்ளாள். அவன் என்னுடையவன் அவன் என்னுடையவன். யாருக்கும் சொந்தமில்லை.

ராகம் மால்கோன்ஸ்

**பக குங்குரூ பாந்த்மீரா நாசீ ரே மைம் தோ அப்னே நாராயண் கோ ஹோ**
**கர்ட் ஆப் ஹி தாஸீ ரே**
**விஷ் கா ப்யால் ராணாஜீ நே பே பீவத் மீரா ஹாம்ஸீ ரே**
**லோக் கஹேம் குல நாஸேஎ ரே மீரா கஹே ப்ரபு கிரிதர் நாகரூ**
**ஸஹஜ் மிலே அவினாசீ ரே**

மீரா காலில் தண்டை அணிகிறாள், நடனம் செய்கிறாள். நாராயணன் ப்ரபுவிற்கு நான் தாஸீ, நான் அவனுக்கு தாஸீ, ராணா ராஜா விஷம் கொடுத்து அனுப்பியுள்ளான். மீரா சிரித்த முகத்துடன் குடிக்கிறாள். மீரா ஒரு பைத்யம் என்று உலகம் சொல்லட்டும். குல நாசினி என்று பந்துக்கள் கூறட்டும். அவினாசியான கிரிதரனுடன் க்ருஷ்ணனுடன் பந்தப்பட்டு விட்டேன் என்று மீரா கூறுவாள்.

# ராஜதரங்கிணி - 2

பி. ஆர். கண்ணன்

## தரங்கம் 1

முதல் தரங்கத்தில் சிவபெருமானைப்பற்றிய துதிகள்.

**பூஷா போகிபணாரத்நரோசி:. ஸிசயசாரவே ।**
**நம: ப்ரலீநமுக்தாய ஹரகல்பமஹீருஹே ।। 1 ।।**

'சரீரத்திலுள்ள பாம்புகளின் படங்களிலுள்ள மணிகளின் ஒளியினால் அதிகமாக ப்ரகாசிக்கும் சிவபெருமானுக்கு நமஸ்காரம்; மோக்ஷமடைந்தவர்கள் லயமாகும் ஸ்தலமாகவும், கல்ப வ்ருக்ஷமாகவும் திகழும் சிவனுக்கு நமஸ்காரம்.

காஷ்மீரத்தில் சிவனை மரக்கட்டையில் வழிபடும் வழக்கம் இருந்தது. நீலமத புராணம் சிவன் 'கபடேஸ்வர'ராக வந்தபோது ஸதீஸரஸ் என்ற குளத்தில் ஒரு மரக்கட்டையாக ஆவிர்பவித்ததைச் சொல்கிறது.

**பாலம் வஹ்நிஸிகாங்கிதம் தததிஸ்ரோத்ரம் வஹந்ஸம்ப்ருத**
**க்ரீடத்குண்டலிஜ்ரும்பிதம் ஜலதிஜச்சாயாச்சகண்டச்சவி: ।**
**வக்ஷோ பிப்ரதஹீநகஞ்சுகசிதம் பத்தாங்கநார்தஸ்ய வோ**
**பாக: புங்கவலக்ஷ்மணோஸ்து யஸஸே வாமோதவா தக்ஷிண : ।। 2 ।।**

'சிவனே, உன் நெற்றியில் அக்னிக் கொழுந்தின் குறி உள்ளது; காதுகளில் குண்டலங்கள் (பாம்புகள், தாடகங்கள்) அசைகின்றன; கழுத்தில் பாற்கடலில் உண்டான ஹாலஹால விஷத்தின் குறியோ (அ) சங்கு போலவோ உள்ளது; மார்பில் வலது பக்கம் பாம்பும், இடது பக்கம் ரவிக்கையும் உள்ளது; உன் பெருமை வலது, இடது என்ற இரு பக்கங்களினாலும் பரவுகிறது. அர்த்தநாரீஸ்வரரைத் துதிக்கும் இப்பாடலில் இரு பொருள் விளங்கும்படி சொற்களைக் கவிஞர் அமைத்துள்ளார்.

காஷ்மீர அரச வரலாற்றைத் தொடங்குகையில் சொல்கிறார்:

**ஸ்லாக்ய: ஸ ஏவ குணவாந் ராகத்வேஷபஹிஷ்க்ருதா ।**
**பூதார்தகதநே யஸ்ய ஸ்தேயஸ்யேவ ஸரஸ்வதீ ।। 7 ।।**

‘விருப்பு, வெறுப்பின்றி, குணத்துடன் வரலாற்றைச் சொல்பவன்தான் புகழ்ச்சிக்குரியவன். நான் அவ்வாறே, ஸரஸ்வதி தேவியின் அனுக்ரஹத்துடன் இவ்வரலாற்றைக் கூறுவேன். இந்த ராஜதரங்கிணியை எழுதுமுன், கல்ஹணர் 11 பழைய சரித்திரங்கள், ராஜ ஆணைகள், கல்வெட்டுகள், அரண்மனை பதிவுகள், நீதித்துறை பதிவுகள், முக்கியமாக நீலமத புராணம் ஆகியவற்றை ஆய்ந்துள்ளார். பல கோவில்கள், இடிபாடுகள், அரசு சின்னங்கள் இவற்றைத் தானே சென்று பார்வையிட்டுள்ளார். கலாசார உணர்வுகள் உள்ள ப்ரஜைகள் எல்லோருக்கும் இந்த சரித்ரம் பிடிக்கும்; இது சாந்தி ரஸத்தை அடிப்படையாகக் கொண்டது என்று சொல்லி கதையைத் தொடங்குகிறார்.

**காஷ்மீர் - ஸமயப் பின்னணி**

**புரா ஸதீஸர: கல்பாரம்பாத்ப்ரப்ருதி பூரபூத் ।**
**குக்ஷௌ ஹிமாத்ரேரர்ணோபி:ஃ பூர்ணா மந்வந்தராணி ஷட் ॥ 25 ॥**

முன்பு ஸதீஸரஸ் என்கிற ஏரிவடிவாக, கல்ப ஆரம்பத்திலிருந்து ஆறு மன்வந்தரங்கள் வரையில் ஹிமயமலையின் உதரத்திலுள்ள பூமி, நீர் நிரம்பியே இருந்தது.

**அத வைவஸ்வதீயேஸ்மிந்ப்ராப்தே மந்வந்தரே ஸுராந் ந**
**த்ருஹிணோபேந்த்ரருத்ராதீநவதார்ய ப்ரஜாஸ்ருஜா ॥ 26 ॥**

**கஸ்யபேந ததந்த:ஸ்தம் காதயித்வா ஜலோத்பவம் ।**
**நிர்மமே தத்ஸரோபூமௌ கஸ்மீரா இதி மண்டலம் ॥ 27 ॥**

பின்னர் தற்போது நிலவும் வைவஸ்வத மன்வந்தர தொடக்கத்தில், கஸ்யப ப்ரஜாபதியானவர் (ப்ரம்மதேவரின் பேரன்), ப்ரம்மா, விஷ்ணு, சிவன் மற்றுமுள்ள தேவர்களை பூமியில் அவதரிக்குமாறு செய்து, இங்கு நீரில் பதுங்கியிருந்த ஜலோத்பவன் என்கிற அஸுரனை வதம் செய்வித்து, மலையை உடைத்து, ஸதீஸரஸ் என்ற ஏரியின் நீரை வடிந்து போகச் செய்து, நிலப்பரப்பினை உண்டாக்கி, காஷ்மீர் ப்ரதேசத்தை ஸ்தாபித்தார்.

இதைத் தொடர்ந்து கல்ஹணர் காஷ்மீரின் வர்ணனையை விதஸ்தா நதியுடன் ஆரம்பிக்கிறார். இந்நதி காஷ்மீருக்கு கங்கையைப் போன்றது. ராஜதரங்கிணியில் அடிக்கடி வருவது.

**உத்வைதஸ்தநி:ஷ்யந்ததண்ட குண்டாதபத்ரிணா ।**

**யத்ஸர்வ நாகாதீஸேந நீலேந பரிபால்யதே ।। 28 ।।**

''காஷ்மீர் ப்ரதேசம் நீலன் என்கிற நாகத்தலைவனின் ஆட்சியில் இருந்தது. நீலகுண்டம் என்கிற நீர்நிலை ராஜ சத்ரம் போலவும், விதஸ்தா நதி அதன் குடைத்தண்டு போலவும் இருந்தது.'' விதஸ்தா என்கிற நதி ரிக்வேதத்தில் ப்ரஸித்திபெற்ற நதிகளின் ஸூக்தத்தில் வருகிறது.

**இமம் மே கங்கே யமுநே ஸரஸ்வதி ஸுதுத்ரி ஸ்தோமம் ஸசதா பருஷ்ண்யா ।**
**அஸிக்ந்யா மருத்வ்ருதே விதஸ்தயார்ஜீகீயே ஸ்ருணுஹ்யா ஸுஷோமயா ।।**

(10.75.5)

'கங்கை, யமுனை, ஸரஸ்வதி, ஸுதுத்ரி, பருஷ்ணி, மருத்வ்ருதா என்கிற விதஸ்தா ஆகிய நதிகள், கிளைநதிகளாகிய அஸிக்னி, அர்ஜீகீயா (விபாஸா), ஸுஷோமா (ஸிந்து) ஆகியவற்றுடன் எங்கள் ப்ரார்த்தனையைச் செவிமடுங்கள்' என்ற இம்மந்த்ரம் க்ருஷ்ண யஜுர்வேதத்திலும் அகமர்ஷண ஸூக்தத்தில் வருகிறது.

மேலும் கல்ஹணர் சொல்கிறார்: பார்வதிதேவி தான் விதஸ்தாநதி ரூபம் எடுத்து, காஷ்மீர் மக்களை அனுக்ரஹிக்கிறாள்.

**குஹோந்முகீ நாகமுகாபீதபூரிபயா ருசிம் ।**

**கௌரீ யத்ர விதஸ்தாத்வம் யாதாப்யுஜ்ஜதி நோசிதாம் ।। 29 ।।**

'பார்வதிதேவி, குஹனிடம் ப்ரியம் கொண்டவளாக இருக்கையில், யானை முகத்தானான கணபதி, தாய்ப்பாலை வெகுவாக அருந்துகிறார். விதஸ்தா நதிரூபத்தை தேவி அடைந்தபோதும், தன் ஸ்வபாவத்தை (ஜனங்களுக்கு அனுக்ரஹிப்பதை) விடவில்லை.' இருபொருள் பட கவி சொல்வதாவது: விதஸ்தா நதி ரூபத்தில் தேவி கீழ்நோக்கிய பூபாகங்களைக் கருணையுடன் பார்க்கையில், அந்நதியின் நீரை நாகர்கள் எராளமாகப் பருகுகின்றனர் என்று.

ஆரம்பத்தில் நீலன் என்ற தலைவனின்கீழ் நாகர்கள் என்கிற தேவதாம்ஸங்கள் இங்கு குடியேறினர். மனிதர்கள் பின்னர் வந்தனர். இந்த விவரங்களை நீலமதபுராணம் கூறுகிறது. நாகர்களின் கீழ் இங்கு நல்ல ஸுபீக்ஷம் நிலவியது.

**புக்திமுக்திபலப்ராப்தி: காஷ்டரூபமுமாபதிம் ।**

**பாபஸூதநதீர்தாந்தர்யத்ர ஸம்ஸ்ப்ருஸதாம் பவேத் ।। 32 ।।**

''பாபஸூதனதீர்த்தம் என்ற நீரில் சிவன் மரரூபமாக உள்ளார். அவரை ஸ்பர்சித்த மாத்ரத்தில் பாபங்கள் பறந்தோடும்; இகலோக சுகமும், முக்தியும் கிடைக்கும்.'' ஒரு நீரில்லாத குன்றின்மீது ஸந்த்யாதேவி நீர் ரூபமாக வந்து புண்யம் செய்தவர்களுக்கு நீரை வழங்குகிறாள். குன்றின்மீது உள்ள எரிமலையை கவிஞர், ப்ரம்மதேவர் தானே ஹோமத்தின் ஸமர்ப்பண த்ரவ்யங்களை ஏற்பதாக வர்ணிக்கிறார்.

**தேவீ பேடகிரே: ஸ்ருங்கே கங்கோத்பேதஸுசௌ ஸ்வயம் ।**

**ஸரோந்தர்த்ருஸ்யதே யத்ர ஹம்ஸரூபா ஸரஸ்வதீ ।। 35 ।।**

''பேடகிரியின்மீது கங்கை பாய்ந்தோடுகிறது; அங்கு ஏரியில் ஸரஸ்வதிதேவியே ஹம்ஸரூபமாக காட்சியளிக்கிறாள்.'' நந்திக்ஷேத்ரம் என்கிற சிவஸ்தலம் ராஜதரங்கிணியில் அடிக்கடி வருகிறது. தேவர்கள் இங்கு வந்து சிவனை உபாஸித்த அடையாளங்களைத் தான் இப்போதும் தெரிகின்ற சந்தனத்துளிகளின் மூலம் அறிகிறேன் என்கிறார் கவிஞர்.

**ஆலோக்ய ஸாரதாம் தேவீம் யத்ர ஸம்ப்ராப்யதே க்ஷணாத் ।**

**தரங்கிணீ மதுமதீ வாணீ ச கவிஸேவிதா ।। 37 ।।**

வேறொரு மலையின்மீது ஸாரதாபீடம் - ஸாரதா தேவியின் கோவில் பற்றிக் கூறுகிறார். அங்கு தேவியைத் தர்சித்து மதுமதி, ஸரஸ்வதி நதிகளை தர்சிக்கலாம். தற்காலத்திலும் கிஷன் கங்கா நதியின் கரையில்தான் ஸாரதா தேவி கோவில் உள்ளது. கிஷன்கங்காதான் மதுமதியாக முற்காலத்தில் விளங்கிற்று. ஸாரதா தேவியையும், ஸரஸ்வதிநதியையும் தர்சித்தால் கவிதாசக்தி பெருகும் என்கிறார்.

**சக்ரப்ருத்விஜயேஸாதிகேஸவேஸாநபூஷிதே ।**

**திலாம்ஸோபி ந யத்ராஸ்தி ப்ருத்வ்யாஸ்தீர்தைர்பஹிஷ்க்ருத: ।।38।।**

காஷ்மீர்தேசம் எவ்வளவு புனிதமானது தெரியுமா? ''சக்ரப்ருத் (விஷ்ணு), விஜயேஸ்வரர், ஆதிகேஸ்வர், ஈஸானர் ஆகியோர் அலங்கரிக்கும் தேசம் அது. அங்கு தீர்த்தங்கள் இல்லாத பூமி என்று, எள்ளளவுகூட கிடையாது.'' ஆலயங்கள், அக்ரஹாரங்கள், மடங்கள் நிறைந்த ப்ரதேசம். ஸனாதனதர்மம் எவ்வளவு தூரம் ஆழமாகப் பதிந்திருந்தது என்பதைப் பார்க்கலாம்.

(தொடரும்)

# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 5

**பஹுமித்ரஸஹ க்ஷிதீச - பாபபஹ
ஸாநித்யம்அரோத்ய ஸத் ப்ரதாபம் ।
மஹதஞ்சித மந்த்ர யந்த்ர சக்திம்
மனஸா சக்திமுபைமி ஸத்விரக்தம் ॥**

**ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மேந்த்ரர்**

'பஹுமித்ரஸஹன் என்ற மன்னன் அவருடைய ஸாந்நித்யத்தால் பாவம் தேய்ந்து பரிசுத்தனாக ஆனானோ' எவர் அழிவற்ற பேரும் புகழுடையவரோ, மஹான்களால் சேமிக்கப்பட்ட மந்த்ர யந்த்ர சக்தியெல்லாம் எவரிடம் பூரணமாக நிலை பெற்றிருந்தனவோ எவர் பரம வைராக்ய சீலரோ அந்த சக்தி முனிவரை நான் மனத்தால் தியானிக்கிறேன்.

அத்வைத ஆசார்ய பரம்பரையில் வசிஷ்ட குமாரரான சக்தி முனிவர் ஒரு விசேஷ ஸ்நானம் வகிக்கிறார். பலப்பல புராணங்களில் இவருடைய பெருமை பேசப்பட்டுள்ளது. பிரும்ம தேவரின் மானாஸ குமாரரான வசிஷ்டருக்குப் பத்தினியான அருந்ததி மூலம் 100 புத்திரர்கள் பிறந்தனர். இவர்களில் மூத்தவர் சக்தி. எல்லோரையும் காட்டிலும் ஆற்றல் மிக்கவராக இருந்ததால் இவர் சக்தி என அழைக்கப்பட்டார். தன் தந்தையிடமிருந்து எல்லா கலைகளையும் கற்றார். அத்ருச்யந்தீ என்பவளை மணந்து கொண்டு இல்லறம் நடத்தினார்.

விச்வாமித்ரர் வசிஷ்டர் மேல் கொண்ட பகை காரணமாக ருதிரன் என்ற பெயருடைய அரக்கனை கல்மாக்ஷயாதன் என்று வழங்கப்பட்ட மித்ரஸஹன் என்னும் மன்னனின் உடலில் புகுந்து கொண்டு சக்தி முதலான வசிஷ்டரின் நூறு குமாரர்களையும் கொல்ல ஏவினார். புத்ர சோகம் தாங்காமல் மலையில் ஏறி தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்கு வசிஷ்டர் தள்ளப்பட்டு விட்டார். பூமி தேவி தற்கொலை செய்து கொள்ள முயன்ற வசிஷ்டரையும், அருந்ததியையும் தாங்கிக் காப்பாற்றினாள். அப்போது சக்தி முனிவரின் பத்தினியாகிய அத்ருச்யந்தி தான் கர்பவதியாயிருப்பதைக் கூறி சந்ததி அறுந்து போகவில்லை என்பதால் துக்கப்பட வேண்டாம் என்று சொல்லித் தேற்றினாள். வசிஷ்டரும் ஆறுதலடைந்தார்.

ஒருநாள் இரவு எல்லோரும் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தனர். வேத மந்திரங்களை ஸுஸ்வரமாக யாரோ உச்சரித்தது கேட்டு விழித்தெழுந்தார் வசிஷ்டர். உறங்கிக் கொண்டிருக்கும் அத்ருச்யந்தீயிடமிருந்து வருவதை உணர்ந்தார். யார் இது என்று தியானிக்கும் போது அசரீரியாக ஒரு குரல் கேட்டது. உமது பேரனும்,

சக்தியின் குமாரனுமான தெய்வ சக்தி பெற்றவன் தாயின் வயிற்றிலிருந்து வேதம் ஓதுகிறான். எதிர்காலத்தில் இவன் பரமசிவ பக்தனாகத் திகழப் போகிறாள். விஷ்ணு புராணத்தையும் எழுதப் போகிறான் என்றது. ஆச்சரியமடைந்த வசிஷ்டர் ஈச்வரனின் கருணையை நினைந்து தியானத்திலாழ்ந்ததார்.

நல்ல நாளில் வசிஷ்டருக்கும், பேரன் பிறந்தான். ஜாதகரணம், நாமகரணம் முதலியவற்றை முறையாகச் செய்தார். சக்தி மகன் சாக்தேயன் என்று பெயரிட்டார். கர்ப்பத்திலிருக்கும் போதே தாயின் துக்கத்திற்குக் காரணத்தைக் கேட்டறிந்து கொண்டார். இருப்பினும் வசிஷ்டர், அருந்ததி முதலானோர் பார்த்துக் கொண்டிருக்க திரும்பவும் குழந்தை தாயின் துக்கத்திற்குக் காரணம் கேட்டது. வேறு வழியின்றி தாயார் விச்வாமித்திரரால் ஏவப்பட்ட அஸுரன் தந்தையை விழுங்கி விட்டான் என்பதைக் கூறினாள். உடனே என் தந்தையை இப்போதே உயிருடன் மீட்டு வருவேன் என குழந்தை சாக்தேயன் பிரதிக்ஞை செய்தான். இதன் பொருட்டு பரமேச்வரனைக் குறித்துத் தவம் செய்தான். உலகில் அஸுரர்களே இருக்கக் கூடாது என்று வேள்வி இயற்றினான்.

ஆயிரக்கணக்கான அஸுரர்கள் அந்த வேள்வித் தீயில் விழுந்து அழிந்தனர். சாக்தேயனின் பித்ரு பக்தியையும், தவ வலிமையையும், மந்திர சக்தியையும் கண்டு வியந்த பார்வதி தேவி பரமனிடம் சக்தி முனிவரை மீட்டுத் தரும்படி வேண்டினாள். பரமன் அனுக்ரஹத்தால் சக்தி முனிவர் உயிர் பெற்று யாக குண்டத்தின் முன் தோன்றினார். தாய் காண்பித்துக் கொடுக்க சாக்தேயன் தந்தை முன் விழுந்து வணங்கினார். மகனைக் கட்டித் தழுவி உச்சி முகந்து ஆசீர்வதித்தார். குழந்தாய் உலகில் யார் யாரைக் கொல்ல முடியும்? பிறப்பும், இறப்பும் அவரவர் கர்ம வினையைச் சார்ந்தவை. எனவே யாரிடத்திலும் த்வேஷமும், சினமும் வேண்டாம். யக்ஞத்தை உடனே நிறுத்து என்றார். வசிஷ்டர் அகமகிழந்து சக்தி முனிவரை ஆரத்தழுவி ஆசீர்வதித்தார்.

அஸுர வகுப்பைச் சேர்ந்த புலஸ்தியர் யக்ஞம் நிறுத்தப் பட்டதில் மகிழ்ந்தார். சக்தி மைந்தனை ஆசீர்வதித்தார். எதிரிகளைக் குறித்துச் செல்லும் குறி தவறாக அம்பு போல் நீ இருப்பதால் இன்று முதல் நீ பராசரன் என அழைக்கப்படுவாய் என்று அருளினார். நீயே உணர்ந்த ஸாத்விக புராணமான விஷ்ணு புராணத்தை எழுதப் போகிறாய் என்று ஆசீர்வதித்து மகிழ்ந்தார். தந்தை விசிஷ்டரிடம் சக்தி வேதாந்த தத்துவங்களைக் கற்றறிந்தார். பரமாத்ம தத்துவ விக்ஞானத்தில் என்றும் திளைத்திருந்தார். இவர் தன் குமாரர் பராசரருக்குத் தான் கற்ற அத்வைத சித்தாந்தத்தை உபதேசித்தருளினார்.

இதன் ஸாரமாகவே இவர் விஷ்ணு புராணத்தை இயற்றினார்.

இவர் காலத்தில் சூரிய வம்சத்து வழித்தோன்றலாக வந்த ஸௌதாஸன் என்ற மன்னன் அயோத்தியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தான். இவனுக்கு பஹுமித்ரஸஹன் என்றும் பெயர் உண்டு. ஒரு சமயம் வேட்டையாடும் போது ஒரு அரக்கனைக் கொன்று விட்டான். இவ்வரக்கனுடைய ஸஹோதரன் அண்ணனைக் கொன்றவனைப் பழிவாங்க வேண்டுமென்று திட்டமிட்டான். அரண்மனையில் மாறுவேடத்தில் மன்னனுக்குச் சமையற்காரனாக வேலைக்குச் சேர்ந்தான். ஒரு சமயம் மன்னன் வசிஷ்டரை போஜனத்திற்கு அழைத்தான். சமையற்காரன் பழிவாங்கும் எண்ணத்துடன் நரமாம்சத்தை பக்குவமாக இன்னதென தெரியாதபடி சமைத்துப் பரிமாறினான். இலையில் அமர்ந்த வசிஷ்டர் ஞானதிருஷ்டியால் இதனை அறிந்தார். கோபங் கொண்டார். மன்னனை நரமாம்ஸம் தின்னும் ராக்ஷஸனாகக் கடவது என சாபமிட்டார். சமையற்காரரின் சூது அறியாத மன்னன் முனிவர் காரணமின்றித் தனக்குச் சாபம் கொடுத்து விட்டார் என வெகுண்டான். கோபத்தில் கமண்டலு தீர்த்தத்தை எடுத்து மந்தரித்து வசிஷ்டர் மேல் தெளிக்க முயன்றான். அருகிலிருந்த மனைவியும், மந்திரியும் இந்த அடாத செயலை செய்யக் கூடாது என தடுத்தனர். குரு அபராதம் வம்சத்தையே அழித்து விடும் என அச்சுறுத்தினர். கையில் எடுத்து நீரைத் தன் கால்களில் மேல் தெளித்துக் கொண்டான். மந்த்ர வீர்யத்தால் இவனது இரு கால்களும் கரிகட்டை போலாயின. இதனால் இவன் கல்மாக்ஷபாதன் என்று வழங்கப்பட்டான்.

சாபத்தால் அரக்கனாகத் திரிந்த காலத்தில் ஒரு சமயம் வசிஷ்ட குமாரர்களை விழுங்க முயன்றான். அப்போது மூத்த குமாரரான சக்தி முனிவரின் தர்சனம் கிடைக்க அவரது கடாக்ஷ விசேஷத்தால் சாப நீக்கம் பெற்றுத் திரும்ப மன்னனாகி அயோத்தியை ஆண்டான். இவ்வாறு பல புராணங்கள் சக்தியின் சரித்திரத்தை சிற்சில மாறுபாடுகளுடன் விவரிக்கின்றன.

# பங்குனி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | வி ப ர ம் |
|---|---|---|
| 15-03-2023 | புதன் | மூலம் வேத பாராயணம் ; மூலம் தேர் ; காரடையான் நோன்பு |
| 17-03-2023 | வெள்ளி | உத்ராடம் தேர் ; உத்ராடம் வேத பாராயணம் |
| 18-03-2023 | சனி | ஏகாதசி ; ச்ரவண த்வாதசி |
| 19-03-2023 | ஞாயிறு | அவிட்டம் தேர் ; அவிட்டம் வேத பாராயணம் ப்ரதோஷ பூஜை |
| 22-03-2023 | புதன் | வஸந்த நவராத்ரி ; உகாதி தெலுங்கு வருட பிறப்பு |
| 30-03-2023 | வியாழன் | ஸ்ரீ ராம நவமி |
| 01-04-2023 | சனி | ஏகாதசி |
| 02-04-2023 | ஞாயிறு | த்வாதசி |
| 03-04-2023 | திங்கள் | ப்ரதோஷ பூஜை |
| 05-04-2023 | புதன் | பௌர்ணமி பூஜை ; பங்குனி உத்ரம் |
| 08-04-2023 | சனி | ஸ்வாதி வேத பாராயணம் |
| 09-04-2023 | ஞாயிறு | அனுஷம் தேர் |
| 10-04-2023 | திங்கள் | அனுஷம் வேத பாராயணம் |
| 11-04-2023 | செவ்வாய் | மூலம் தேர் |
| 12-04-2023 | புதன் | மூலம் வேத பாராயணம் |

17-03-2023; 24-03-2023; 31-03-2023 07-04-2023; 14-04-2023

வெள்ளிக்கிழமை பூஜை மாலையில் ஸ்ரீ மஹாத்ரிபுரசுந்தரி

சமேத ஸ்ரீசந்த்ரமௌளீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை

# சாணக்ய ஸுபாஷிதம்

£µU ¸ í Áõ é ®

A ¯® A®¸u {uõÚ® \ AUµ÷Põ¨÷¯õ åwÚõ®
B®¸u©¯\Ÿµ; Põ¢v ²U÷uõ¤ \¢zµ:
£Áv ÂPuµ ì ª º© s h»® ¨µõ¨¯ £õ÷Úõ:
£µéuÚ {Â è h: ÷Põ »SzÁ® | ¯õv »

தண் மதியன் சந்த்ரன் அமிழ்தத்திற்கு மூலம், ஓஷதிகளுக்குத் தலைவன் சரீரமோ அமிழ்தம் ஆதவன் கிரணம் பட்டு இவை மறையும். சுயமாக இல்லாதவன் இன்னொருவனை எதிர்பார்த்தால் மதிப்பு இருக்குமா?

y ´ ø©

u›zµuõ wµu¯õ Âµõá÷u SÁ ì zµuõ _¨µu¯õ Âµõá÷u
Pu ß Ú • è n ® ¸ ] ¸z Âµõá÷u S ¹ £uõ ^»u¯õ Âµõá÷u »

வறுமைதான் தீரத்தினால் ஒளிரும். கந்தை தான் வெண்மையால் ஒளிரும். பழையதுதான் உஷ்ணத்தால் ருசியாகும் குருபம் தான் சீலத்தால் ஒளிரும்.

S n ÷© £ n ©À»

S nõ éºÁzµ §ä¯¢÷u |© í z÷¯õ¤ é®£u:
§º÷ n ¢x: Q® uuõ Á¢z÷¯õ { è P» [ ÷Põ ¯uõ U ¸ é: »

குணங்களே பூஜிக்கப்படும். பணக்குவியல் இருப்பினும் பூர்ண சந்த்ரன் வணங்கபடுகிறானா? அல்லது களங்கமில்லாமல் உள்ள இரண்டாம் பிறை வணங்கப்படுகிறதா?

AÔSÔ

B \õµ: S»©õU¯õv ÷u\©õU¯õv £õ å n ®
é®¨µ©: ì ÷Ú í ©õU¯õv Á¦µõU¯õv ÷£õá Ú®»

ஆசாரம் குலத்தைச் சொல்லும், பேச்சு தேசத்தைச் சொல்லும் சம்ப்ரமம் நட்பைச் சொல்லும் உடல் போஜனத்தைச் சொல்லும்.

_ z u®

_ z u® § ª Pu® ÷uõ¯® _ z uõ |õŸ £ v Æµuõ
é ú ] : ÷ ñ ©P÷µõ µõáõ é ¢ x è ÷ hõ ¨µõ ð © n ; é ú ] : »

*மண்ணில் உரைந்த நீர் தூயது பதிவ்ரதை தூய்மையானவள் நன்மை செய்யும் அரசன் தூய்மையானவன். திருப்தியுடன் உள்ள அந்தணன் தூய்மையானவன்.*

uõµ n ®

A ¨ ¯ õ é õz uõº ¯ ÷u Â z ¯ õ S »® ^÷» Ú uõº ¯ ÷u
S÷ n Ú g ¯ õ£÷u B º ¯ : ÷Põ÷£õ ÷ | z÷µ n P® ¯ ÷u »

*பயிற்சியினால் கல்வி மேம்படும் சீலத்தால் குலம் தாங்கப்படும் நன்னடத்தையால் ஆர்யன் அறியப்படுவான். கண்களால் கோபம் தாங்கப்படும்.*

G Î x

÷Põ A v £õµ: é ©ºz uõ Ú õ® Q® y µ® Æ ¯ Á é õ ° Ú õ®
÷Põ Â ÷u é : é ú Â z ¯ õ Ú õ® ÷Põ A ¨ › ¯ : ¨ › ¯ Á õ v Ú õ® »

*சக்திமானுக்கு எது அதி பாரம்? வணிகனுக்கு எது அதி தூரம்? கல்விமானுக்கு எது விதேசம்? இன்சொல்லாளனுக்கு யார் அப்ரியன்?*

C ø Á C ¸ ¢uõÀ

÷»õ£a÷\z S÷ n Ú Q® ¤ _ Ú uõ ¯ z ¯ ì v Q® £õu ø P:
é z ¯ ®÷\z u£ é õ \ Q®? é ú ] ©÷Ú õ ¯ u ì v wºz÷u Ú Q®
ö é Î á ß ¯ ® ¯ v Q® S ø n : é ú© î ©õ ¯ z ¯ ì v Q®© s h ø Ú:
é z Â z ¯ õ ¯ v Q® u ø Ú: A £ ¯ ÷ é õ ¯ u ì v Q® • ¸ z ² Ú õ? »

*கருமித்தனம் இருப்பின் குணத்தால் ஆவதென், கோள் சொல்லுதல் இருப்பின் பாதகங்களால் ஆவதென், ஸத்யமிருப்பின் தவத்தால் ஏன்? மனத்தூய்மை இருப்பின் தீர்த்த யாத்ரை ஏன், ஸௌஜன்யம் இருப்பின் மற்ற குணங்களால் என் மகிமை இருப்பின் அலங்காரத்தால் ஏன், நற்கல்வி இருப்பின் தனத்தால் ஆவதென், இகழ்ச்சி இருப்பின் சாவால் ஆவதென்?*

*(தொடரும்)*

ப்ரதீபப் பேழை

# ஸ்ரீ பாலபோத ஸங்க்ரஹம்

ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்யார் இயற்றியது

ஸ்ரீமத் அனந்தானந்த ஸ்வாமிகள் தமிழில் எழுதியது

**குரு** : ஹே சிஷ்ய நான் சொல்வதைச் சாவதானமாய்க் கேள். இவை 17-ஆம் லிங்கசரீரம் எனப்படும். எப்போது நீ இவையெல்லாம் அல்ல (நீ அல்ல) என்று தெரிந்து கொண்டாயோ அப்போது தேவதிர்யக் மனுஷ்யாதிகளில் ஜன்மம் முதலியவை உனக்கு இல்லை. முழங்கால் முறிந்து நொண்டிக்குப் போவது வருவது முதலியவை எப்படி இல்லையோ அதுபோல.

**சிஷ்யன்** : ஸ்வாமி, தங்கள் அநுக்கிரகத்தினால் பஞ்சப் பிராணன்கள், மனம், புத்தி, ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள் இந்த 17-ஆம் அ பஞ்சீக்ருதமான பூதங்களிலிருந்து ஏற்பட்டவை. இவை போக சாதனங்கள். நான் இவை அல்ல என்று அறிந்து கொண்டேன். ஆனால் நான் யார் என்று நான் அறிந்து கொள்ளவே இல்லை. (நான் யாரென்று எனக்குத் தெரியவில்லை) தாங்கள் என்மேல் கிருபை செய்து அதை எனக்குத் தெரிவிக்க வேண்டும்.

**குரு** : ஹே சிஷ்ய, இதுதான் உன்னுடைய காரண சரீரம். எப்படி என்றும் எல்லாவற்றையும் அறிகிறேன். ஆனால் என்னை மாத்திரம் அறியவில்லை என்று சொல்கிறாய். இதுதான் அறியவில்லை என்னும் அஞ்ஞானந்தான் ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்களுக்கும் காரணமாதலால் இது காரண சரீரம் என்று சொல்லப்படுகிறது. இதுதான் அவித்யை. இந்த அவித்யைதான் சம்சாரமாகிற அனர்த்தத்தை ஏற்படுத்துகிறது. ப்ரஹ்மாத்மைக்ய ஞானத்தைத் தோன்றவிடாமல் மறைக்கிறது. இந்த அஞ்ஞானத்தின் அவித்யையின் நிவ்ருத்தியே முக்தி. முமுக்ஷுக்கள் பிரயத்தனம் செய்து அந்த அஞ்ஞானத்தைப் போக்கடிக்க வேண்டும்.

**குரு** : ஹே ஸ்வாமி, அதைப் போக்கடிப்பது எப்படி?

**சிஷ்யன்** : சிஷ்ய, நீயே "நான் என்னை அறியவில்லை" என்று சொல்லுகிறாய் அல்லவா? உன்னைக் காட்டிலும் வேறு யாராவது அவ்வாறு கூறுகிறார்களா? சொல்லுகிறவனும், பார்க்கிறவனும், கேட்பவனும் நீயே தான்.

**சிஷ்யன் :** இந்த விஷயத்தில் ச்ருதிப்ரமாணம் இருக்கிறதா?

**குரு :** அடே குழந்தாய், எல்லா வேதாந்தங்களின் கருத்தும் இதுதான். ச்ருதிப் பிரமாணம் சொல்லுகிறேன். கேட்பாயாக. இதைக் காட்டிலும் சொல்வது (பேசுவது) வேறு ஒன்றும் கிடையாது. அப்படியே இதைத் தவிர நினைக்கிற வஸ்து வேறு ஒன்றுமில்லை. இதைத் தவிர பார்க்கிற வஸ்துவும் வேறு ஒன்றும் கிடையாது என்று வேதங்கள் முறையிடுகின்றன. எதனால் பேசுகிறானோ, எதனால் கேட்கிறானோ, (அது இந்த ப்ரஹ்மந்தான்) என்று அநேக ச்ருதி பிரமாணங்கள் இருக்கின்றன. மூன்று இடங்களிலும் (பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம்) ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்னும் மூன்று அவஸ்தைகளிலும் அநுபவிக்கிறவனாகவும், அநுபவமாகவும், அநுபவிக்கப்படுவதாகவும் எது இருக்கிறதோ, இவைகளைக் காட்டிலும் இவைகளுக்கு விலக்ஷணமாக, இவைகளுக்கெல்லாம் ஸாக்ஷியாக சின்மாத்ர ஸ்வரூபமான சதாசிவன் நான். ஸ்ம்ருதியிலும் (பகவத்கீதையிலும்) என்னை க்ஷேத்ரக்ஞனாகவும் தெரிந்து கொள் என்றும், சர்வபூதங்களுக்கும் ஆத்மாவை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. விஷ்ணு புராணத்திலும், காணப்படும் இவை எல்லாமும், வாசுதேவனாயும், பரமபுருஷனாயும் இருப்பது எல்லாம் ஒன்றே என்றும், அனந்தமான பகவானிடத்தில் சுத்தமான பாவம் (எண்ணம்) எவர்களின் ஹ்ருதயத்தில் இருக்கிறதோ அவர்களைத் தூரத்தில் விட்டு விட்டுப் போய்விடு (அவர்கள் சமீபத்தில் கூடச் செல்லாதே) என்று யமதர்மராஜன் தன்னுடைய தூதர்களைப் பார்த்துச் சொல்லுகிறான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

**சிஷ்யன் :** ஸ்வாமி, தங்களுடைய அநுக்கிரகத்தாலேயே நான் இந்தத் தேகமல்ல என்ற ஞானம் எனக்கு ஏற்பட்டு விட்டது. ஆனால் இந்த ஞானம் ஏற்பட்டதனால் என்ன லாபம்?

**குரு :** எப்போது பஞ்சீக்ருத பஞ்ச மகாபூதங்களின் சேர்க்கையால் ஏற்பட்ட இந்த ஸ்தூல சரீரம் நீ இல்லையோ அப்படியே இந்த ஸ்தூல சரீரத்தைக் கொண்டு ஏற்படுகிற நாமம், ரூபம், ஜாதி, வர்ணம், ஆச்ரம் முதலியவையும் உண்மையில் இல்லாமல் போய்விடும். இந்த நாமம், ரூபம், ஜாதி முதலியவை இந்த ஸ்தூல சரீரத்துக்கே தவிர, அதைக் காட்டிலும் வேறாக இருக்கும் உனக்கு அல்ல.

இந்த விஞ்ஞானத்துடன் ஸர்வாத்மாராமனாய் எவன் ஒருவன் இருக்கிறானோ அவனே பிரம்மன். அவனே சிவன். அவனே ஹரி, அவனே இந்திரன், அவனே அக்ஷர ஸ்வரூபியான பரப்ரம்மமாக ஸ்வராட்டாக இருக்கிறான்.

காணப்படும் ஜ்யோதிகளெல்லாம் விஷ்ணுவே. சகல புவனங்களும் விஷ்ணுவே. காடுகளும் விஷ்ணுவே. மலைகளும் விஷ்ணுவே, நதிகள், சமுத்திரங்கள் இவை எல்லாம் விஷ்ணுவே. விஷ்ணுவைக் காட்டிலும் வேறான தனி வஸ்து ஒன்றுமே கிடையாது.

குரு இவ்விதம் உபதேசிக்கவே சிஷ்யன் இந்த அநுபவத்தை அடைந்தவனாய் இருந்து கொண்டு தான் அநுபவிக்கும் ஸ்திதியைச் சொல்லுகிறான்.

பாவத்துக்கு இடமில்லை, புண்ணியத்துக்கும் இல்லை. பத்தனாய் இருக்கும் தன்மையுமில்லை. முக்தனாயிருக்கும் தன்மையுமில்லை. குறைவுள்ளதுமல்ல, குறைவில்லாமல் நிறைவுள்ளவனுமல்ல. மனமே, ஏன் வீணாகப் புலம்புகிறாய்? உண்மையில் எல்லாம் சமமே. நான் எனக்கே நமஸ்காரம் செய்கிறேன். ஒருவராலும் எட்ட முடியாத சரீரத்தை (ஸ்வரூபத்தையுடையவனாய் எல்லாவற்றையும் தரிக்கிறவனான எனக்குச் சமமானவன் வேறு ஒருவனுமில்லை. அளவிட முடியாத சுகசமுத்திரமாயும், ஞான சமுத்திரமாயும் இருக்கிற என்னிடத்தில் அநேகமாயிரம் பிரம்மாண்டங்களான நீர்க் குமிழிகள் மாயாமயமான காற்றினால் உண்டாகி மறுபடியும், மறுபடியும் மறைந்து போகின்றன (நாசத்தை அடைகின்றன) தேவதைகளை உத்தேசித்துக் கொடுக்கப்படும் ஹவ்யமும், (பித்ருக்களை உத்தேசித்துக் கொடுக்கப்படும்) கவ்யமும், விலக்கக் கூடியது சேர்த்துக் கொள்ள கூடியது என்று சொல்லப்படுகிற தன்மையற்றவனும் நான். நானே ஹரியாக இருக்கிறேன். ஹரனாயும், பிரம்மாவாயும் இருப்பவனும் நான் தான். இவர்களுக்கெல்லாம் (மூல) காரணமாக இருப்பவனும் நானே. தர்ம ஸ்வரூபமாக இருப்பவன் நான் தான். அதர்ம ஸ்வரூபனும் நான் தான். தர்மம், அதர்மம் என்ற கட்டுப்பாடுகள் இல்லாதவன் நான். (நான் ஒருவிதக் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டவனல்ல.) தார்மிகர்களால் சுலபமாய் அறியக்கூடியவன் நான். நான் தன்யனானேன்.

பிரம்மாவுக்கு மூலகாரணமாக இருப்பவன் நான், மகான்களால் கௌரவிக்கத் தக்கவன் நான். மந்தமதிகளால் நான் கௌரவிக்கப்படாதவன். (அவர்களால்

என்னை அறிய முடியாது). கர்வம், மானம், ராகம் (ஆசை) இவைகளால் மோகத்தையடைந்த மனமுடையவர்களாய், துர்வாசனைகளினால் தூண்டப்படுகிறவர்களால் அடையக்கூடாதவன் நான். (அவர்களால் என் நிஜ ஸ்வரூபத்தை அறிய முடியாது). நான் தேவர்களையும், நமஸ்கரிக்க மாட்டேன். அவர்கள் தான் எப்போதும் என்னை நமஸ்கரிப்பார்கள். என்னைக் காட்டிலும் வேறு வஸ்துவே இல்லை. சின்மாத்ர ஸ்வரூபமான சதாசிவனே நான். இது என்ன? இதன் ரூபம் என்ன? இது எப்படி உண்டாயிற்று? இதற்கு காரணமென்ன? என்றெல்லாம் புத்திமானால் சிந்திக்கப்ட வேண்டியதில்லை. எல்லாமும் என்னிடத்தில் இருக்கிறதென்று சிந்திக்க வேண்டும். (ராகம் ஆசை), த்வேஷம் என்னும் அலைகளுடன் கூடிய சம்சாரமென்னும் இந்தச் சமுத்திரம் பூர்வ ஜன்மத்தில் நான் செய்த புண்ணியங்களாகிய பாக்கியத்தால் ஏற்பட்ட அநுகூலமாகிய காற்றின் உதவியால் குருவின் கருணையாகிய தோணியால் தாண்டப்பட்டது.

தாய் நமக்குச் சரணமாக மாட்டாள். தகப்பனார் சரணமாக மாட்டார். சகோதரர்கள் ஆகட்டும், வேறு மனிதர்கள் ஆகட்டும், நமக்குச் சரணமாக மாட்டார்கள் (நம்மைக் காப்பாற்ற மாட்டார்கள்). குருவினுடைய பாதங்கள் தாம் நமக்குச் சரணம். (அவை நம்மைக் காப்பாற்றும்) அவரால் என் சிரசில் வைக்கப்பட்டிருக்கும் அவருடைய சரணங்களே எனக்கு எப்போதும் சரணம் (அடைக்கலமாக இருக்கிறேன்). குருவின் சரணம் இருக்கிறது. அவருடைய பார்வையில் எல்லையில்லாத அளவற்றற கருணை பெருகுகிறது. ஆத்மா எல்லையற்றிருக்கிறது. (எங்கும் நிறைந்திருக்கிறது) இந்த ஜன்மம் ஸபலமடைவதற்கு வேறு என்ன வேண்டும்? உத்தமமானதும், ச்ரேஷ்டமானதும், சாதுக்களால் ஆதரவுடன் ஒப்பக் கூடியதுமான இந்த விஷயத்தை எவன் அறிகிறானோ அவனே மேதாவி, அவனே முக்தன். இதில் சந்தேகமே இல்லை.

# முகாம் நிகழ்ச்சிகள்

தொடர்ச்சி

விசாகப்பட்டினத்தில் தொடர்ந்து நித்ய பூஜைகள் நடைபெற்று வருகின்றன.



***பிப்ரவரி 4ம்*** தேதி மாலை ஸ்ரீ ஸ்ரீ சுவாமிகள் விசாகப்பட்டினத்தில் உள்ள எம்.வி.பி. காலனியில் அமைந்துள்ள ஸ்ரீ பார்வதி சமேத முக்தேஷ்வர சுவாமி தேவாலயத்திற்கு விஜயம் செய்தார்கள். இவ்வாலயத்தில் மாணவர்களுக்கு வாராந்திர பந்ததி வகுப்புகள் துவங்கப்படும் எனவும் அருளிச் செய்தார்கள்.

***பிப்ரவரி 5*** தைப்பூச தினமான இன்று குமார போஜனத்திற்காக குழந்தைகள் முகாமிடத்தில் குழுமியிருந்தார்கள். அவர்களது காலை சந்தியாவந்தனத்திற்கு பிறகு சூரிய நமஸ்காரத்தில் கலந்து கொண்டார்கள். தினசரி ஸ்ரீ சந்திரமௌளீஸ்வர பூஜைக்குப் பிறகு அவர்களுக்கு தீர்த்த பிரசாதம் வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து சுப்ரமண்ய புஜங்கம் அவர்களால் பாராயணம் செய்யப்பட்டு, பின்னர் குமார போஜனமும் நடைபெற்றது.

மாலை பௌர்ணமி பூஜைக்குப் பின்னர் பாண்டுரங்க தேவாலயத்தில் நடைபெற்ற சண்டி ஹோம பூர்ணாஹுதியில் கலந்து கொண்டு அனுக்ரஹித்தார்கள். தொடர்ந்து விசாகப்பட்டினம் கடற்கரையில் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம பாராயணம் இரவு 9.30 மணியளவில் நடைபெற்றது. பௌர்ணமி நன்னாளில் ஸ்ரீஸ்ரீ ஆச்சார்யர்களின் முன்னிலையில் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம பாராயணம் செய்து அனுக்ரஹம் பெற்றது பாக்கியமாகும்.

***பிப்ரவரி 8ம்*** தேதி ஸ்ரீஸ்ரீ பெரியவா இயற்கை சூழலால் பின்னப்பட்டதும், கலை நயத்துடன் செதுக்கப்பட்டதுமான சிம்ஹாசலத்திலுள்ள ஸ்ரீ வராஹ நரசிம்ம சுவாமி மலைக்கோவிலுக்கு விஜயம் செய்தார்கள். இக்கோவிலின் சிறப்பம்சம் ஸ்ரீ வராஹ நரசிம்ம பெருமாளுக்கு ஆண்டு முழுவதும் சந்தனக்காப்பு சாற்றப்பட்டிருக்கும். ஆண்டின் அக்ஷயதிருதியை நாளன்று சந்தன காப்பு களையப்பட்டு புதிதாக சந்தன காப்பு சாற்றுமுறை நடைபெறும். பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்யர்கள் கோவிலைச் சுற்றி

கலையம்சங்களை பார்வையிட்டார்கள். விசாகப்பட்டினத்திலிருந்து வந்திருந்த பெண் குழந்தைகள் கோவில் மண்டபத்தில் ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ம கராவலம்ப ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்தார்கள். கோவிலுக்கு வந்திருந்த பக்தர்களுக்கு ஸ்ரீ ஸ்ரீ பெரியவா அனுக்ரஹபாஷணம் வழங்கியதுடன் கோவில் அலுவலர்களுக்கும் பிரசாதம் வழங்கினார்கள். பின்னர் மலையடிவராத்தில் உள்ள சிவாலயத்திற்கும் விஜயம் செய்தார்கள். இவ்விடத்தில் வேத பாடசாலை ஒன்றினை அனுக்ரஹித்த பின்னர் மற்றும் ஒரு சிவாலயத்திற்கும் விஜயம் செய்து முகாம் திரும்பினார்கள்.

பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் ஜெயந்தி மஹோத்ஸவம் ஸ்ரீ மடம் முகாம், காஞ்சிபுரம் ஸ்ரீ மடம் வளாகத்தில் வைதீக முறைப்படி விசேஷமாக கொண்டாடப்பட்டது. அதற்கு முன்பாக 16.02.23 முதல் மூன்று நாட்கள் சதுர்வேத பாராயணம் வித்வத் சதஸ், நாம சங்கீர்த்தனம், மாலையில் சங்கீத நாத சமர்ப்பணம் முதலிய நடந்தன. மற்றும் அநேக இடங்களிலும் பக்த சிரத்தையுடன் கொண்டாடப்பெற்றது.

விசாகப்பட்டினத்தில் ஜெயந்தி நாளன்று அதிகாலை மங்கள வாத்யம் இசைக்கப்பட்டது. பத்துக்கும் மேற்பட்ட நாதஸ்வரம் மற்றும் தவில் வித்வான் குழுவினரின் இனிமையான பழக்கத்தில் உள்ள தேர்ந்த ராகங்களில் இன்னிசை நிகழ்த்தினார்கள். பக்தர்கள் சுவாமிகளின் விஸ்வரூப தரிசனத்திற்காக காத்திருந்து தரிசனம் செய்ததுடன் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வர பூஜையின் பொருட்டு நடந்த கோ பூஜையையும் கண்டு வணங்கினார்கள். பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் பூஜைக்கு செல்லும் முன்னர் பக்தர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மலர் மாலைகள், மலர் கிரீடங்கள் மற்றும் த்ரவ்யங்கள் ஆகியவற்றை ஸ்வீகரித்து அனுக்ரஹித்தார்கள்.

நித்ய பூஜை முடிந்த பின்னர் பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் கோசாலையில் 14ம் தேதியிலிருந்து நடைபெற்று வரும் மஹாருத்ரம் மற்றும் ஷட சண்டியாகங்களுக்கு விஜயம் செய்து பக்தர்களுக்கு பூஜை தீர்த்த பிரசாதம் வழங்கி அனுக்ரஹித்தார்கள். ஸ்ரீஸ்ரீ சுவாமிகள் முன்னிலையில் ஹோமம் மற்றும் இஷ்டி பூர்ணாஹுதிகள் நடைபெற்றன.

வேத மந்திரங்கள் முழங்க ஹோம கலசங்களின் புனித பூஜிக்கப்பட்ட நீரால் ஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்திர சங்கராசார்ய சுவாமிகளுக்கு அபிஷேகம் செய்விக்கப்பட்டது.

ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்மன் தேவஸ்தானம், ஸ்ரீ பங்காரு காமாக்ஷி அம்மன் திருக்கோவில் தஞ்சாவூர், திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வர சுவாமி தேவஸ்தானம் மற்றும் பல்வேறு திருக்கோவில் பிரசாதங்கள் வேத மந்திரங்களுடன், ஸ்ரீநிவாஸ கட்டம் திருமலா திருப்பதி தேவஸ்தான நிர்வாக அதிகாரி முன்னிலையிலும்,

திருவானைக் கோவில் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி கோவில், திருவரங்கம் கோவில், மலைக் கோட்டை ஸ்ரீ உச்சிப் பிள்ளையார் கோவில், சமயபுரம் ஸ்ரீ மாரியம்மன் கோவில், அன்னவரம் ஸ்ரீ சத்ய நாராயண சுவாமி கோவில், ஸ்ரீ கனக மஹாலக்ஷ்மி கோவில், ஸ்ரீ போதேந்திர சுவாமிகள் பிருந்தாவன பிரசாதம், மாவட்டக்குடி ஸ்ரீ பூமி நீலா சமேத ஸ்ரீ பிரசன்ன வெங்கட ரமண சுவாமி கோவில், மாவட்டகுடி ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமி கோவில், ஸ்ரீ காசி விஸ்வநாத சுவாமி கோவில், ஸ்கந்தகிரி ஸ்ரீ சுப்ரமண்ய கோவில், விசாகப்பட்டினம் ஸ்ரீ சம்பத் விநாயகர் கோவில் பிரசாதங்களும் பூஜ்ய ஸ்ரீ ஆசார்யர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

கன்யா பூஜை, வடுபூஜை, தம்பதி பூஜைகள் பெருவாரியான பக்தர்களின் ஆர்வமிகு பங்களிப்புடன் நடைபெற்றன. ஸ்ரீஸ்ரீ சுவாமிகள் பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளுக்கு சுவர்ண பாத பூஜை செய்விக்கப்பட்டு பின்னர் மஹா சிவராத்திரி பூஜைக்கு புறப்பட்டார்கள்.

மாலை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் ஆஸ்தான வித்வான் ஸ்ரீ மாண்டலின் U. ராஜேஷ் குழுவினரின் நாத சமர்ப்பணம் நடைபெற்றது.

**பிப்ரவரி 21ம்** தேதியன்று ஸ்ரீஸ்ரீ பெரியவா விசாகப்பட்டினம் கடற்கரை கண்கவர் பகுதியில் அமைந்துள்ள காளிமாதா கோவிலுக்கு விஜயம் செய்த பின்னர் அங்கிருந்து நடை பயணமாக சர்வகலாசாலை பட்டமளிப்பு மையப்பகுதியில் போரா அபிநந்தன சபா இடத்திற்கு ஸ்ரீ ஜகத்குரு எழுந்தருளினார்கள். விசாகப்பட்டினம் சங்கரமடம் பக்தர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பல்வேறு நிகழ்ச்சிகளில், இரண்டு மாதங்கள் தங்கியிருந்து பக்தர்களுக்கு அருளாசி வழங்கியதை நினைவு கூர்ந்தார்களஂ.

இந்நிகழ்வில் ஆந்திரபிரதேச துணை முதல்வர் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ஸ்ரீ கோடா சத்யநாராயண காரு, தகவல் துறை அமைச்சர் ஸ்ரீ அமர்நாத் காரு, நீதிபதி திருமிகு சோமயாஜுலு காரு மற்றும் விசாகப்பட்டினத்தின் முக்கய பிரமுகர்களும் கலந்து கொண்டார்கள்.

பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் விஜய யாத்திரை பிப்ரவரி 22ம் தேதி வரை விசாகப்பட்டினத்திலும், பிப்ரவரி 23 முதல் 26 வரை ஸ்ரீகாகுளத்திலும், 27 மற்றும் 28 தேதிகளில் விஜயநகரத்திலும், மார்ச் 1 மற்றும் 2ல் அனகப்பள்ளியிலும், மார்ச் 3 முதல் 7ம் தேதி வரை கொவ்வூரு இடத்திலும் முகாம் நடைபெறவுள்ளது.

கொவ்வூரில் மார்ச் 4ம் தேதி பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் ஆராதனை நடைபெற உள்ளது,

# அத்வைத சாஸ்திரமே பிரும்மவாதமெனும் சுத்தமார்க்கம்

ஸ்ரீ. நா. கிருஷ்ண சாஸ்திரிகள், தேவகோட்டை

வேதம் இரண்டு காண்டமாக உள்ளது. இவற்றுள் முதலாவதாகிய கர்மகாண்டம் இறைவனது அர்ச்சனைக்கும் பயன்படும்.

இரண்டாவதாகிய ஞானகாண்டம் இறைவனது வடிவிலா வடிவினை காட்டும்.

திருவிளையாடற் புராணத்தில்

**அருமறை நால்வேறாகையால் வருணவாச் சிரமங்களு நான்காந்**
**தருமம் யாகாதி கருமமு முறையின் றகைமையிற் றோன்றின மறையுங்**
**கருமநூன் ஞானநூலென விரண்டால் கரும நூலிங் னருச்சனைக்கு**
**வரும்வினை யுணர்ந்து ஞானநூலிவன்றன் வடிவிலா வடிவினை யுணர்த்தும்**

என்று கூறப்படுகிறது.

இவ்வாறு வைகதிகநெறியே மேலான தெனக் கொண்டு, வேதம் சிறந்த பிரமாணமாகக் கொள்ளப்படுகிறது. வேதமே பிரமாணமென்றால், சித்தாந்த சாஸ்திரங்களும், ஆகமங்களும் பிரமாண நூல்களாக ஏற்பட்டதன் பயன் என்ன?

சூத சங்கீதையில்

**இத்தரு வைதிக மார்க்கப் பிரவிருத்தி யில்லாருக்**
**கத்தானா ரணத்தில் வன்னந் தருமமாகச் சிரமநல**
**மொத்த பூசாதியெலா முரைத்தபடி பற்பலவும்**
**சித்தநல வாகமத்துஞ் செப்பியிருக் கின்றனனால்**

என்று கூறப்பட்டிருக்கிறது

இதன்படி வேதத்தில் அதிகாரமில்லாதவர்களுக்காக, ஆகமங்களைப் பின்பற்றிச் சித்தாந்தங்கள் ஏற்பட்டன. எனவே, அவையும் பிரமாண நூல்கள். பிராமணர்களுக்கு வேதத்தில் அதிகாரம் உள்ளபடியினாலே தான், முற்காலத்தில் அந்தணர்கள் யாவரும் அத்வைதிகளாகவே இருந்தனர். பஹூதகம், குடீசகம் என்னும் துறவறங்களை மேற் கொண்ட

பிராமணர்கள் எப்பொழுதும் தரித்துக் கொண்டிருக்கும் முக்கோல், அரி, அயன், அரன் என்னும் மும்மூர்த்திகளினுடைய அபேதத்தையும் தெரிவிக்கவே கொள்ளப்பட்டது என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறு மூர்த்திகளுக்குள் அபேதங் கொள்கின்றவர் அத்வைதிகளே யாகின்றனர். ஆதலால், முற்காலத்தில் மூர்த்திய பேதத்தைத் தெரிவிப்பதற்காக முக்கோல் தாங்கியிருந்தமையால், அந்தணர் யாவரும் அத்வைதிகளாகவே இருந்தனர்.

ஆகமங்களும், 'சைவாகமம்', 'வைஷ்ணவாகமம்' என்ற தத்தம் பெயருக்கேற்ப சிவனையோ, விஷ்ணுவையோ முக்கியமாகக் கொண்டன. அவற்றில் ஒரு தெய்வம் முக்கியமாகக் கூறப்படுகிறது. ஆதலால் மும்மூர்த்திகளும் ஒன்றுபட ஸகுண ப்ரம்ஹோபாசனத்திற்கு அவற்றில் இடம் இல்லை.

பக்குவமடைந்த சிலர், தமது உபாஸனாதைவத்தை மற்ற மூர்த்திகளோடு ஒன்றுபடுத்திக் துதிக்கிறார்கள். ஆழ்வாராதிகளும் அறிவு முதிர்ச்சியால் மும்மூர்த்திகளுக்குள் அபேதத்தைக் கண்டவர்களே.

**தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்**
**சூழ்அரவும் பொன்நாணும் தோன்றுமால் - சூழும்**
**திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு**
**இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து**

**பேயாழ்வார்**, இயற்பா, முன்றாங் திருவந்தாதி 63

அத்வைதமே வேதத்தில் கூறப்பட்ட சாஸ்திரம். மஹாபாரதத்தில் சாந்திபருவத்தில் सांख्यं योग: पाञ्चरात्रं वेदा: पाशुपदं तथा என்று கூறப்பட்டிருக்கிறது. இங்கு சாங்க்யம், யோகம், பாஞ்சராத்ரம், பாசுபதம் என்னும் இவற்றினும் வேறானதாகத் தனியாக வேதமதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வைதிக தர்சனந்தான் அத்வைத தர்சனம்.

இதுவே மஹாகவியான ஸ்ரீ ஹர்ஷனாலும்

साप्तुं प्रयच्छति न पक्षचतुष्टये तां
तल्लाभशंसिनि न पञ्चमकोटिमात्रे ।
श्रद्धां दधे निपधराडिमतौ माताना
मद्वैततत्व इव सत्यतरेऽपि लोक: ।।

என்று நைஷத காவியத்தில் 'பஞ்சநலீய' ஸர்க்கத்தில் கூறப்படுகிறது.

இதன் பொருள் : தமயந்தி அங்குள்ள நளர் ஐவரில் முதல் நான்கு பொய்நளர்களும், உண்மை நளரில்லையென்று அறிந்தது போலவே, ஐந்தாமவனான உண்மை நளனையும் உண்மை நளன் என்று அறியவில்லை. இது எதைப் போன்றது என்றால், உலக மக்கள், ஸாங்க்யம், யோகம், பாசுபதம், வைஷ்ணவம், அத்வைதம் என்னும் ஐந்துமத தத்துவங்களில், முதல் நான்கு தத்துவங்களிடத்தும், அசிரத்தை காட்டுவதைப் போலவே, மிகவும் உண்மையான அத்வைத தத்வத்தினிடத்திலும் நம்பிக்கை வைக்காமலிருப்பதைப் போன்றது.

இங்கு, அத்வைத தத்வம் என்ற சொல்லுக்கு 'ஸத்யதரம்' என்ற சொல் அடைமொழியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'மிகவும் ஸத்யமான' என்பது இதன் பொருள். இந்தச் சொல் அத்வைதந்தான் வியாவஹாரிக ஸத்யத்தைக் காட்டிலும் அதிகமான பாரமார்த்திக ஸத்யத்தை யுடையதாயிருக்கின்றது என்பதைக் குறிப்பிடுகிறது.

'புஷ்பதந்த மஹிம்நஸ்தோத்ர' த்தில்

त्रयी सांख्यं योग: पुशुपतिमतं वैष्णवामिति
प्रभिन्ने प्रस्थाने

என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த சுலோகம் முற்கூறிய பாரத சுலோகத்தையே யனுஸரித்துப் பரமசிவனைத் துதிக்கிறது.

நியாய சாஸ்திர ப்ரவர்த்தகமான உதயனாசாரியாரும், 'வேத நயம்' என்று கூறுகிறார். அத்வைதத்தைப் பற்றிக் கூறும் அந்த இடத்திலே தான் 'வேதநயேஜயஸ்ரீ' என்று ஜயலக்ஷ்மி பதத்தை முழக்குகிறார்.

மேலும் திருமூலர், திருமந்திரத்தில், அந்தணர் ஒழுக்கத்திலே, மற்ற இடங்களைக் காட்டிலும் அதிகமாக வைதிக கர்மானுஷ்டானங்களையும், வேதாந்தத்தையும் நிரூபிக்கிறார். இதனாலும் மும்மூர்த்திகளையும் ஒற்றுமையாகத் தொழுதனர் அந்தணர் என்று நச்சினார்க்கினியார்க் கூறப்பட்டது தெளிவாகின்றது.

எனவே, அத்வைதிகளை மாயாவாதிகள் என்று கூறுவது தக்கதன்று அவர்கள் பிரும்மவாதிகளே இத்தகைய பிரும்மவாதிகளே. வைதிக சைவர்களும் ஆனார்கள்.

அத்வைதிகள் வேதத்தை மாத்திரம் ஆசிரயித்தவர்கள். 'பிரத்யக்ஷம், அநுமானம் முதலிய பிரமாணங்களைக் காட்டிலும், வேதமே சிறந்த பிரமாணம்' என்று கொள்கின்றவர். விசிஷ்டாத்வைதிகளும், சைவர்களும் வேதத்துடன் ஆகமத்தையும், மனிதரியற்றிய

*திருவாய்மொழி, தேவாரம் முதலியவற்றையும் பிரமாணங்களாக உடையவர்கள். வைஷ்ணவதுவைதிகள், ஸாங்கியர், தார்க்கிகர் முதலியோர் வேதத்தைப் பிரமாணமாகக் கொண்ட போதிலும், பிரத்யக்ஷத்தையும், அநுமானத்தையும், வேதத்தைக் காட்டிலும் சிறந்த பிரமாணமாகக் கொண்டிருக்கிறவர்கள். அத்வைதிகள் மாத்திரந்தான் பரம்பொருளை யாராயுங் காரியத்தில், வேதமொன்றையே சரணமாக எண்ணுகின்றவர்கள். மற்ற பிரமாணங்களைக் காட்டிலும் வேதமே சிறந்த பிரமாணம் என்று கொள்கின்றவர்கள். அதனாலேதான், அத்வைதிகள், வைதிகர்களாய், வேதத்தைப் பிரமாணமாய் கொள்கின்றவர்களாய் விளங்குகிறார்கள். இத்தகைய வைதிக ஸித்தாந்தத்தைக் கடைப்பிடித்து, வழிபாட்டு நேரங்களில் பரம்பொருளை சிவனாக வழிபடுகின்றவர்களே வைதிக சைவர்கள். அதனால் தான் சிவரஹயத்தில், ஸ்ரீமத் பகவத்பாதாசாரிய ஸ்வாமிகளைக் குறித்துக் கூறும்போது,*

*அத்வைத சாஸ்திரமே பிரும்மவாதமெனும் சுத்தமார்க்கம்*

तद्योगभोगवरमुक्तिसुमोक्षयोग ।
लिङ्गार्चनाप्राप्तजय: स्वकाश्रमे ।।

*என்று சொல்லப்பட்டிருக்கிறது.*

*‘யோகலிங்கம், போகலிங்கம், வரலிங்கம், முத்திலிங்கம், மோக்ஷலிங்கம் ஆகியவற்றை அர்ச்சனை செய்தமையால், ஜயம் பெற்றவராய் -’ என்பது இதன் பொருள்.*

*இந்த ஜயலக்ஷ்மியைத் தான் உதயனாசாரியார், ‘வேதநயே ஜயஸ்ரீ’ என்று முழங்குகிறார்.*

त ग्राह्यभेदमवधूय धियोऽस्ति वृत्ति
तद्बाधके बलिनि वेदनये जयश्री: ।
तो चेदनित्यमिदमीद्दशमेव विश्वं
तथ्यं तथागतमतस्य त कोऽवकाश ।।

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

**ஓம் முக்திமஹத்வவிதே வேதாந்த பாஸ்கராய நம : ।**

ஜ்னானாதேவ ஹி ஜ்ஞனாம் நோபாஸன சதைரபி ।
குருபதேசச்ரவணாத் ஜ்ஞானம் தோந்த பாஸ்கர : ।।

**கைவல்யம் ஞானத்தினால் மட்டுமே உண்டாகும். பலவித உபாஸனைகளினால் அல்ல. குருவினுடைய உபதேசத்தைக் கேட்பதால் ஆத்ம ஞானம் உண்டாகிறது.**

## *4. சத்குரு சேவையினாலே ஞானப்பிராப்தி*

ஸுகேசா ச பாரத்வாஜ: சைப்யச்ச ஸத்யகாம: ஸௌர்யாயணீ ச கார்க்ய: கௌஸல்யச்சாச்வ லாயனோ, பார்கவோ வைதர்பி: கபந்தீ காத்யாயன:, தே ஹைதே ப்ரஹ்மபரா ப்ரஹ்மநிஷ்டா: பரம் ப்ரஹ்ம அன்வேஷமாணா:, ஏஷ ஹ வை தத்ஸர்வம் லக்ஷ்யதீதி தே ஹ ஸதித்பாணய:, பகவந்தம் பிப்பலாந்தம் உபஸன்னா: ।।

ப்ரச்னோபநிஷத் 1 - 1

***பரத்வாஜனின் மகன் ஸுகேசனும், சிபியின் மகன் ஸத்யகாமனும், ஸௌர்யனின் மகன் கார்க்கியனும், அச்வலனுடைய மகன் கௌஸல்யனும், ப்ருகுவின் மகன் வைதர்பியும், காத்யனின் மகன் கயந்தியுமாகிய இந்த அறுவரும் அபரப்பிரம்ம உபாஸனையில் நிஷ்டராக இருந்தனர். இவர்கள் பகவானாகிய பிப்பலாத மகரிஷியை இவர் மூலமாகவே பரப்பிரம்ம வித்யையை அறிய முடியும் என்றுணர்ந்து அவரை சமித்துக்களுடன் அணுகினர்.***

*உபாஸனாநிஷ்டராகி அஷ்டஸித்திகளைப் பெற்ற போதிலும் ஸாதகன் ஜீவன் முக்தன் ஆக மாட்டான். ஆத்ம ஞானத்திலிருந்தே ஜீவன் முக்தி. ஸத்குரு சேவையும் அவருடைய உபதேச சிரவணமும் தான் ஆத்ம ஞானத்தைக் கொடுக்கும். கர்ம உபாஸனையின் பலன்கள் யாவும் செயற்கை யானதால் அநித்யமே முக்தி நிலையே நம் நிஜஸ்வரூபம். அதுவே மனித குலத்தின் குறிக்கோள்.*

**॥ ஓம் அவித்யாஸ்வரூபவிதே வேதாந்தபாஸ்கராய நம : ।**

கர்மமார்க்கரதா யே தே ஹ்யாத்மஞானவிவர்ஜிதா: ।

ஜாயந்தே ச ம்ரியந்தே ச ஸதா வேதாந்த பாஸ்கர: ॥

***ஆத்ம ஞானமின்றி கர்ம மார்க்கத்தில் மட்டும் மூழ்கி இருந்தால், அவன் பிறப்பு, இறப்பு என்ற சுழலில் இருந்து விடுபட முடியாது.***

# 5. காரிருள் போன்ற அவித்யையின் பலன் !

அவித்யாயாமந்தரே வர்த்தமானா: ஸ்வயம் தீரா: பண்டிதம் மன்யமானா: ।
ஜங்கன்யமாளா: பரியந்தி மூடா: அந்தேனைவ நீயமானா யதாந்தா: ।

முண்டகோபநிஷத் 1-1 - 3

**காரிருள் போன்ற அவித்யையில் இருந்து கொண்டு, தான் தீரன் என்றும், பண்டிதன் என்றும் நினைத்துக் கொண்டிருக்கும் மூடன், துக்க ஸாகரத்தில் வீழ்ந்து, உழன்று, மீண்டும் சம்சார சக்கரத்தில் சிக்கித் துயரமடைகிறான். ஒரு குருடனால் வழிகாட்டப்பட்ட குருடர்களைப் போல் இக்கர்ம மார்க்கத்தில் உழல்பவர்கள் இருக்கின்றார்கள்.**

*சாஸ்த்ரீய கர்மங்களில் மட்டுமே மூழ்கி இருப்பவர்களை இம்மந்திரம் மூடர்கள் என்று நிந்தனை செய்கிறது. இவர்கள் தாம் அறிந்ததையே ஆத்ம ஞானம் என்று பிரமிக்கிறார்கள். இக்காரிருள் அறையில் இருந்து கொண்டு, இவர்கள் தம்மைத் தாமே விவேகி, தீரர், பண்டிதர் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது எல்லா அஞ்ஞானிகளுடைய தலைவிதி!*

*இப்படிப்பட்டவர்களுக்கு மோக்ஷம் கிடைக்காது. அது மட்டுமின்றி அவர்கள் சம்சார மார்க்கத்திலேயே மீண்டும் மீண்டும் சுழன்று துயருறுவர். இதுவே அவித்யையின் பலன்!*

# புராணக் கதை

காஞ்சி வாதூலன்

இன்று என்ன கதை என்று சிஷ்யன் கேட்க பொராணிகர் கூறுவார். பல சமயங்களில் உண்மைக் கதைக்குப் பதிலாக நகல் வடிவம் ப்ரசித்தி பெறும். உண்மை புறம் தள்ளப்படும். மக்கள் நகலையே உண்மை என்று நம்பி விடுவர். பெரிய புராணத்தில் சேக்கிழார் தந்திருக்கும் நந்தனார் சரித்திரம் உண்மையானது. கோபால க்ருஷ்ண பாரதியால் பாடப்பட்ட நந்தனார் கதை நகல். இதையே உண்மை என்று மக்கள் நம்பி ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை தூற்றும் அளவுக்குப் போய்விட்டது. இப்போது உண்மைக் கதையைப் பார்ப்போம்.

கொள்ளிடம் என்னும் ஆறால் செழிப்பாக உள்ள நாடு மேற்கா நாடு ஆகும். அங்கே ஆதனூர் என்னும் ஊர் ஒன்று உண்டு. உழவுத்தொழிலால் கூலி வேலை செய்வோரின் சிறு குடில்கள் பல இருந்தன. அங்கு மாமரங்களின் தோலால் செய்யப்பட்ட பறைகள் தொங்கும். பறைகள் செய்தல், தோற்கருவிகள் செய்தல் போன்ற செயல்களை வாழ்வாதாரமாகக் கொண்டு நந்தனார் என்பவர் இருந்தார்.

நெஞ்சத்தை சிவன் பால் வைத்து அவருக்கு அடிமையானார். தன் குலத் தொழிலுக்கேற்ப வந்த மான்ய வருவாய் கொண்டு வாழ்க்கையை நடத்தி வந்தார். சிவன் கோவில்களுக்கு பேரிகைக்கு வேண்டிய போர்வைத் தோல், அதைப் பிணிக்கும் வார்கள் தருவது, யாழ் வீணை முதலிய இசைக்கருவிகளுக்கு வேண்டிய நரம்புகளைத் தருவது வழி பாட்டிற்கான கோரோசனை தருவது இவரது தொழில். இவ்வாறு பல வேலைகளைச் செய்த போதும் சிவனை நினைத்து உருகி கோவிலின் வெளியே பாடுவார், ஆடுவார்.

திருப்புன்கூர் என்னும் ஊரில் இருந்த சிவனை வணங்க எண்ணி அவர் ஒரு நாள் ஆதனூரிலிருந்து அங்கு சென்றார். வாயிலிலிருந்து சிவனை வணங்க முயன்றார். வழியில் நந்தி மறைப்பது கண்டு சிவனை நினைத்துப் பாட அவனருளால் நந்தி விலக சிவனை தர்சித்தார். இருப்பினும் அவரது குறை சிதம்பரத்தில் நடராஜ பெருமானை தர்சிக்க முடியவில்லை என்பதே. பல இரவுகள் ஏக்கத்துடன் கழிந்தன. தம் குலத்தினர் கோவில் உள்ளே செல்ல முடியாதிருப்பது கண்டு வருந்தினார். ஒவ்வொரு நாளும் தில்லை செல்லவில்லையா என்று கேட்போரிடம் நாளைப் போவேன்' என்று கூற அவர் பெயரே நாளைப் போவார் என்றாயிற்று. இப்படி பல நாட்கள் கழிய ஒரு நாள் தில்லைக்குப் புறப்பட்டார். எங்கும் வேத முழக்கம், வேள்விச் சாலைகளிலிருந்து ஹோமப் புகை மணம், ஆடல், பாடல் இவைகளால் நிறைந்த

தில்லையைக் கண்டவர் சபையில் ஆடும் நடராஜனைக் காணமுடியாமல் வெளியே உள்ளுருகி தன் பிறவியை நொந்து கொண்டு நின்றார்.

இவரது அன்பைப் பார்த்த சிவன் அவர் கனவில் தோன்றி உனது இப்பிறவி அகல நெருப்பினில் மூழ்கி வா, அதற்கு தில்லை மூவாயிரம் அந்தணர் எரி அமைப்பர் என்று கூறி அவர்களது கனவிலும் நந்தனாருக்கு எரி அமைத்துக் கொடுக்க ஆணையிட்டார்.

அப்படியே அந்தணர்கள் அவருக்கு எரி அமைத்துக் கொடுக்க அந்த எரியில் சிவனை சிந்தித்தவாறே புகுந்தார். முன்னிருந்த வடிவு நீங்கி மாமுனிவர் போல் வடிவு பெற்றார். அந்தணர்கள் கை கூப்பித் தொழ அவர்களோடு கோபுரம் பணிந்தார். தில்லை பெருமானின் கூத்திடும் மன்றத்தில் புகுந்தார். அதன்பின் அவரை யாரும் பார்க்கவில்லை. சிவனோடு கலந்தார்.

இதுதான் அசலான நந்தனார் சரித்திரம். கோபால க்ருஷ்ண பாரதியாரின் கதை நகல். அவரது காலத்திற்கேற்ப பல மாற்றங்களைச் செய்து அவரது நந்தனார் சரித்திரம் படைத்தார். உண்மையில் எந்த பண்ணையாரும் அவரை துன்புறுத்தவில்லை. தன் குலத்துக்கேற்ப அமைதியான சைவ வாழ்க்கையை நடத்தி வந்தவர். சிவனிடம் அவரது காதல் உண்மையானது. தூய்மையானது. அதற்கேற்ப உயர்ந்த பலனை அடைந்தவர் நந்தனார். என்று கூறி ஓய்ந்தார் பௌராணிகர்.

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்
சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும்
சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது
கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

‘‘ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

டி. வி. ராமசாமிப் பிள்ளை சென்னை



டன்லப் க்ருஷ்ணன் அவர்களுடன் ஹம்பிக்குச் சென்ற கதையுடன் தொடர்வோம். ஹம்பியிலிருந்து மீண்டும் ஹகரிக்கு வந்து மாலை 6 மணி அளவில் ஸ்ரீ சரணர்களிடம் சென்றோம். எந்தெந்த கோவில்கள் பார்த்தீர்கள்' என்று வினவ நான் நோட் புக்கில் குறித்து வைத்திருந்தவைகளை வரிசையாகச் சொன்னேன். பிறகு க்ருஷ்ண அய்யர் திருமுறை பாராயணம் செய்ய அமர்ந்தார். நான் ஒதுங்கி நின்றேன். ஸ்ரீ ஸ்வாமிகள் என்னை அருகில் வரும்படி கையைக் காட்டி என்னையும் சேர்த்து திருமுறை வாசிக்கச் சொன்னார்.

''இறுமார்ந்திருப்பேன் கொலோ ஈசன் பல்கணத்து எண்ணப்பட்டு சிறுமான் ஏந்தி தன் சேவடிக்கீழ்ச் சென்றங்கு இறுமார்ந்திருப்பேன் கொலோது'' என்று அப்பர் பாடி மகிழ்ந்தது போல் என் இறைவன் திருவடிக்கீழ் சென்று கலந்து அவன் அடியாருள் ஒருவனாய் இறுமாந்திருக்கும் காலம்

அன்று தொடங்கி விட்டதை உணர்ந்தேன். 27-7- 1978 வியாழக் கிழமை இப்படி என் வாழ்வில் மறக்க முடியாத நாளாயிற்று.

முதல் நாளில் இரண்டு பதிகங்கள் மட்டும் படித்தோம். பன்னிரண்டு திருமுறைகளில் தேவாரம் மட்டும் ஏழு திருமுறைகள் ஆகும். அதைத் தலவழிபாடாக ஒவ்வொரு தலத்தின் மீதும் வெவ்வேறு திருமுறைகளிலுள்ள பாடல்களை ஓதுவது ஒரு முறையாகும். நாங்கள் படித்தது இந்த தல வழிபாட்டு முறை. பிறகு பெரியவர்கள் 'தேவாரத்தை ஓதுவார்கள் என்று தனியாக ஒரு பிரிவினர் படிப்பது என்று மக்கள் நினைக்கிறார்கள். ப்ராம்மணர்களும் திருமுறைகளைக் கண்டிப்பாக ஓதவேண்டும்.

திருஞான ஸம்பந்தர் கௌண்டின்ய கோத்ரத்தில் பிறந்து நான்கு வேதங்களையும் படித்தவர். 'நான்மறை ஞான சம்பந்தன்' என்று தன் பாடல்களில் முத்ரை வைத்துப் பாடியிருக்கிறார். லால்குடி கோயில் ஒன்றில் உள்ள கல்வெட்டில் அந்தணர் தேவாரம் ஓதவேண்டும் என்று பொறிச்சியிருக்கு. தற்கால ஓதுவார்களுக்கெல்லாம் முதல் ஆசிரியர் லக்ஷ்மண ஐயர். அதேமாதிரி கோனாசார ப்ராம்மணர் உண்டு. நியோகி அமாத்ய ப்ராம்மணர் என்று சொல்லுவர். மாணிக்க வாசகர் நியோகி ப்ராம்மணர்தான்'' என்று ப்ராம்மணர்களும் தேவாரம் ஓதவேண்டும் என்ற அவஸ்யத்தை வற்புறுத்தினார்.

மறு நாள் பகலில் தேவாரம் இரவில் திருவாசகம், அதன் பிறகு திருக்கோவையார், அது முடிந்து ஒன்பதாம் திருமுறை இப்படியாக பாராயணம் தொடர்ந்தது. ஒரு நாள் பெரியவர்கள் ' ஒரு தலத்தின் மீது ஒரு பதிகம் இருந்தால் அது பாடல் பெற்றத் தலம். ஒரு பதிகத்தில் ஒன்றிரண்டு பாட்டில் மட்டும் பெயர் இருந்தால் அது வைப்புத்தலம்.

திருமுறைகளில் பகல் பண்கள், இராப்பண்கள், பொதுப்பண்கள் என்று மூன்று வகை. அவைகளுக்கான ராகங்கள் உண்டு. சிவப்பதிகங்கள் 1008 அதில் பாடப்பெற்ற தலங்கள் 275. இதே மாதிரி வைஷ்ணவத்தலங்கள் 108. ஆழ்வார்கள் அவைகளைப் பற்றி பாடி உள்ளனர். அந்தத் தலங்களை 'மங்களா சாஸனம்' செய்யப்பட்ட தலம் என்று சொல்வர்'' என்று விஸேஷமான செய்திகளைச் சொன்னார்கள்.

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலம் மட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
**டாக்டர். வே. ராகவன்** - தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் : **ஜயவிஜயா**

## *கர்ண பர்வம்*



*அந்த அஸ்த்ரத்தை மீண்டும் அர்ஜுனன் மீது எய்ய சல்யன் கர்ணனைத் தூண்டினான்.*

குந்திக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற மீண்டும் அதை எய்யவில்லை. தன் ரதம் சேற்றில் சிக்கியதைக் கண்ட கர்ணன் ஹே ! அர்ஜுனா உலகிலேயே நீ சிறந்த வில்லாளி. உன் அறமும் பெரியது. யுத்த தர்மங்களையும் அறிவாய். ஒரு முஹூர்த்த காலம் பொறு . இந்த ரதத்தின் சக்ரத்தை விடுவிக்கிறேன்.'' என்று கூறினான். இதைப் பார்த்த க்ருஷ்ணர் கூறினார்.

'' அட கர்ணா நீ கூட தர்மம் பேசுகிறாய். சிக்கலில் இருக்கையில் பேசுகிறாய் போலும். பாஞ்சாலியை சபையில் துச்சாசனன் இழுத்து வந்தபோது எங்கே போயிற்று உன் தர்மம் ? சூது தெரியாத தர்மனை கபட சூதாட்டத்திற்கு அழைத்து வந்தபோது எங்கே போயிற்று உன் தர்மம் ? அக்யாத வாஸம் முடிந்த பின்னும் பாண்டவர்களுக்கு ராஜ்யம் கொடுக்கப்படவில்லை. அப்போது எங்கே போயிற்று உன் தர்மம் ?

உன் சம்மதத்துடன் துர்யோதனன் பீமனுக்கு விஷம் வைத்தானே அப்போது எங்கே போயிற்று உன் தர்மம் ? அரக்கு மாளிகையில் பாண்டவர்களை கொளுத்த ஏற்பாடு செய்யப்பட்ட போது எங்கே போயிற்று உன் தர்மம்?

மாத விலக்காயிருந்த பாஞ்சாலியை துச்சாசனன் கையில் சிக்கியிருந்த போது எங்கே போயிற்று உன் தர்மம்? பாஞ்சாலி! இன்னொரு பதியை தேர்ந்தெடு என்று அவளைப் பார்த்து சபையில் இகழ்ந்தாயே அப்போது எங்கே போயிற்று உன் தர்மம்? ராஜ்யத்தை மீண்டும் பெற சகுனியுடன் தர்மனை மீண்டும் சூதாட அழைத்தீர்களே அப்போது எங்கே போயிற்று உன் தர்மம்? பல வீரர்கள் சேர்ந்து வீரனான அபிமன்யுவைக் கொன்றீர்களே அப்போது எங்கே போயிற்று உன் தர்மம்?

இப்படி க்ருஷ்ணர் கேட்க கர்ணன் வெட்கத்தால் தலை குனிந்தான். இருப்பினும் வீரனான கர்ணன் இடி முழக்கம்போல் மீண்டும் போரிட்டான். தீயைப்போல் ஒளிரும் ஒரு கணையை அர்ஜுனனின் மீது ஏவ அதைத் தாங்க முடியாமல் சற்று தளர்ந்தான் அர்ஜுனன். இப்படி இருக்கையில் கர்ணனுடைய ரதம் பூமியில் இருந்த பள்ளத்தில் சிக்கியது. சல்யன் தன்னை விட்டுப் போயிருக்க கர்ணன் ஒருவனே ரதத்தின் சக்ரத்தைத் தூக்கி நிறுத்த முயன்றான். பெரிய பலசாலியாக இருப்பினும் விதியின் வலியால் அவனால் அதை அசைக்கக் கூட முடியவில்லை. அந்த சமயத்தில் க்ருஷ்ணர் அர்ஜுனனிடம் 'அர்ஜுனா கர்ணனது தலையைத் துண்டித்து விடு'' என்று கூற அவனும் ஒரு திவ்யாஸ்த்ரத்தை எடுத்து கர்ணனது தலையைக் கொய்தான். பாஞ்சஜன்யமும் தேவத்தமும் வெற்றி கோஷத்தை முழக்க அந்தரிக்ஷம் முழுவதும் வெற்றி கோஷம் நிரம்பியது.

அப்போது இறந்த கர்ணனது உடலிலிருந்து தேஜஸுடன் ஓர் ஒளி புறப்பட்டு ஸூர்ய மண்டலம் புகுந்தது.

கர்ண பர்வம் முற்றும்.

# சிவ மான ஸிக பூஜை

ஸதாசிவ ப்ரம்மேந்திரர் அருளியது

எங்கும் இருக்கும் பரமாத்வான சிவனை ஒரு ரூபத்தில் எப்படி
பூஜிப்பது என்ற திகைப்பில் எழுந்த ஸ்லோகங்கள் ப்ரம்ம ஞானியான
ப்ரம்மேந்த்ரர் தன் அனுபூதியில் அருளியது



सुमनश्सेखर भव ते सुमनोन्जलिरेष को भवेच्चम्भो ।

छत्रम् हृद्युमन् हृद्युर्मूर्ध्नच्चामरमपि किम् जितश्रमस्य तवें ।। ११ ।।

é ú©Ú ì ÷\Pµ £Á ÷u _©÷Úõg\¼÷µå ÷Põ £÷Áz \®÷£õ \zµ® z²©ß z²º‰ºzÚ\õ©µ©¤ Q® âu ì µ© ì¯ uÁ › 11 ›

*ஹே பவனே சம்புவே ! மலர்சூடிய திருமுடி உடையவனே உனக்கு கை கூப்பி ஸமர்ப்பிக்கும் இந்த புஷ்பம் என்னாவாகும்? வானத்தை இடமாகக் கொண்டவனே வானத்தை தலையாய் உடையவனுக்கு குடையும் ஸ்ரமத்தை வென்றவனுக்கு சாமரமும் ஏன்?*

न्रुत्यम् प्रथताम् कथमिव नाथ तवाग्रे महा नटस्येह

गीतम् किम् पुरवैरिन् गीतागममूलदेशिकस्य पुरः ।। १२ ।।

¢¸z¯® ¨µuuõ®Puª Á |õuuÁõU÷µ© í õÚh ì ÷¯ í

Ru® Q® ¦µøÁ›ß RuõP©‰»÷u]P ì¯ ¦µ: › 12 ›

*நாதனே இங்கே மஹா நடனமாடிய உன் முன்னிலையில் எவ்வாறுதான் நடனம்*

*நடக்கும்? முப்புரமழித்தவனே ஸங்கீத ஸாஸ்த்ரத்திற்கு மூலமான ஸாம வேதத்தின் ஆதி குருவுக்கு முன் என்ன ஸங்கீதம்?*

वाह्द्यम् डमरुभ्रुतस्ते वादयितुम् वा परे अस्ति का शक्ति:

आपरिछिन्नस्य भवेत् अखिलेश्वर क: प्रदक्षिणधिस्ते ।। १३ ।।

Áõz¯® h© ¸ ¨ ¸u ì ÷u Áõu ° x® Áõ£÷µ A ì vPõ éUv;

A£› ] ßÚ ì ¯ £÷Áz AQ÷» ì ÁµP: ¨µu ò n Âv ì ÷u »

*டமருகத்தை ஏந்தியவனுக்கு முன் வாத்யம் வாசிப்பதில் இன்னொருவனுக்கு என்ன சக்தி உள்ளது? அகிலத்திலிருந்து பிரிக்க வொண்ணாத உன்னைக் குறித்து எவ்வாறு ப்ரதக்ஷிணம் செய்வது?*

स्युस्ते नमाम्सि कथमिव शन्कर परितोपि विध्यमानस्य

वाचामगोचरम् त्वयि वाक्प्रसरो मे कथमब नु सम्भवतु ।। १४ ।।

ì ² ì ÷u |©õ® ê Puª Á \ [Pµ£›÷uõ¤ Âz¯õ©õÚ ì ¯

Áõ\õ©÷Põ\µ® zÁ ° ÁõU¨º é ÷µõ ÷©Pu® ~ é ®£Á x »

*எல்லா இடத்திலும் இருப்பவனான உனக்கு சங்கர! நமஸ்காரங்கள் எப்படி யுக்தமாகும்? வாக்குகளுக்கு எட்டாதவனான உன்னைப்பற்றி வாக்கினால் துதி செய்வது என்னால் எப்படி ஸம்பவிக்கும்?*

नित्यानन्दाय नमो निर्मलविग्यान विग्रहाय नम:

निरवधिकरुणाय नमो निरवधि विभावाय तेजसे अस्तु नम: ।। १५ ।।

{z¯õÚ¢uõ¯ |÷©õ {º©»ÂU¯õÚõ¯ ÂUµ í õ¯ |©:

{µÁvP¸ n õ¯ |÷©õ {µÁv Â£õÁõ¯ ÷uá÷é A ì x |©: »

*நித்யானந்தனே உனக்கு நமஸ்காரம். மாசில்லாத நல்ல அறிவே வடிவான உனக்கு நமஸ்காரம். எல்லையில்லாத கருணை வடிவிற்கு நமஸ்காரம். எல்லை இல்லாத மேன்மைகளை உடையவனுக்கு ஜோதி வடிவனுக்கு நமஸ்காரம்.*